1446

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

1446
4-56

15-11

OFFICE OF THE ... OF BOOKS
26 DEC 1956
MADRAS

32
இ22ரைவு
M56.15.11
210734

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்		பக்கம்
1.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	294
2.	செய்திகள்	298
3.	ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த முமுக்ஷு யார் [ஸ்ரீ. உப. வித்வான், உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி, மதராஸ்.]	301
4.	மஹாவீரவைபவம் [ஸ்ரீ. உப. வித்வான், பாதூர், புராணம், ஸரளகவி, ராகவாசார்யஸ்வாமி, வ்யாகரணாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]	303
5.	பெரியோர்கள் பக்கலில் ... ... 1 [ஸ்ரீ. உப. வேதாந்தவாவதூக, வித்வான், வில்லிவலம், நாராயணாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]	307
6.	43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	309
7.	பஞ்சாங்கஸங்ரஹம்	312

ஸ்ரீ:

ஸ்ரீ கைசிக மாஹாத்ம்யம்

ஸ்ரீபராசர பட்டர் அருளிச்செய்த

மணிப்ரவாள வ்யாக்யாநத்துடன் கூடியது.

ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனத்தின்பேரில் க்ருஹங்கள்தோறும் கைசிக த்வாதசியன்று ஸேவிப்பதற்காக இப்புத்தகம் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. க்ரந்தாக்ஷரத்தில் ச்லோகமும் மணிப்ரவாளத்தில் வ்யாக்யாநமுமுளது. இப்புத்தகம் வேண்டுவோர் 6 அணா ஸ்டாம்பு (தபால் செலவு உள்பட) கீழ்க்கண்ட விலாஸத்திற்கு அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

கிடைக்குமிடம்:— மானேஜர், ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,
திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.

-:ஓர் விஜ்ஞாபனம்:-

இம்மாதம் எதிர்பாராதவிதமாக அச்சு யந்திரத்தில் ஏற்பட்ட சிறு கோளாறினால் பக்கங்கள் குறைவாக பத்திரிகை வெளிவந்துள்ளது. வாசக மஹாசயர்கள் பொறுத்துக் கொள்ள வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

1446
4-56

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 15 } துர்முகி ஸ்ரீ கார்த்திகை மீ { ஸஞ்சிகை 11

'அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாந: |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்திதா |
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

210734

மனிதன் தன் அறிவுத் திறனால் தன் ஸமூஹத்தின் நலனை உத்தேசித்து ஒருயர்ந்த அரசு ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டான். அநுபவத்தின் மூலம் ஏற்பட்டது இம்முறை. இது நாகரீகத்தின் அறிகுறி. ஆனால் நாகரீகமே மாறுவதுபோல் ஆட்சிமுறையும் மாற ஆரம்பித்தது.

மனிதர்கள் தங்களுடைய ஆட்சிமுறையை தங்களுடைய நலனை உத்தேசித்து தாங்களாகவே நடத்திக்கொள்வது சிறந்தமுறை என்று எண்ணவாரம்பித்தனர். இதுதான் ஜனநாயகம். தத்காலரீதியில் பஹுநாயகம் என்று சொல்வதும் மிகையாகாது.

மிதமான அறிவும் அநுபவமும் உள்ள பலருக்கு அறிவாளியும், அநுபவசாலியுமான ஒருவன் தன் திறமையினால் தலைவனாவது இயற்கை. இம்மாதிரியான திறமைசாலிகளின் அநுபவத்தைப் பயன் படுத்திக்கொண்டு ராஜ்யத்தை அறிவாளிகள் நடத்திவருவார்களானால் அது நாட்டின் நலனுக்கு அறிகுறியாகும். ஆனால் காலப்போக்கு ஒரேமாதிரியாக இருக்காதல்லவா? ஒவ்வொருவனும் தலைவனாகவர ஆசைப்படுவதும், தன் சுயநலத்தை உத்தேசித்து தன் அறிவுத்திறனை அதற்கென்றே உபயோகிப்பானேயாகில், அந்த ஆட்சியை பஹுநாயகம் என்பதைத்தவிர வேறு எவ்வாறு குறிப்பிடமுடியும்?

இம்மாதிரியான ஜனநாயகத்தில்தான் நாம் வசிக்கிறோம். ஜனநாயகத்தில் பெரும்பான்மையோரின் கருத்துக்களே கௌரவிக்கப்படும் என்ற நிலைமை தெளிவாகிவிட்டால் அதை பஹுநாயகமெனச்சொல்வதில் பிழை என்ன? சிறுபான்மையோரின் கருத்துக்களையும் கேட்டு அதற்குத் தகுந்தபடி கார்யங்களையும் செவ்வனே செய்யவும் வேண்டும். அப்படிக் கின்றி சிறுபான்மையோரையே அழித்துவிடுதல் நமது முக்கியக் கொள்கை எனப் பெரும்பான்மையோர் எண்ணுவார்களேயானால், அது பஹுநாயகந்தானே.

ஸமீபத்தில் பல அறிவாளிகளும், உயர்ந்த ஸ்தாநங்களை அலங்கரிப்பவர்களும் இவ்விதம் கூறிவருகின்றனர். சிறுபான்மையோர் தங்களுடைய கொள்கைகளை பெரும்பான்மையோருக்கு விரோதமின்றிக்கே அமைத்துக்கொள்ளுவதுதான் முறை எனக் கூறுகிறார்கள். இது மிகவும் பிழையான கொள்கை. சிறுபான்மையோர்கள் அறிவாளிகளில்லை என்றோ அறிவை உபயோகிக்க அருகதையற்றவர்கள் என்றோ கொள்வதா? பின் என்; அவர்கள் தங்கள் கொள்கைகளையும் மற்றவர்களுடைய கருத்துக்களுக்குத் தக்கபடி மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும் எனக் கூறப்படுகிறது.

சில நாட்களுக்குமுன் இம்மாதிரியான சில கருத்துக்களை பல பெரியோர்கள் வெளியிட்டுள்ளனர். பொதுக்கார்யங்களில் பெரும்பான்மையோருக்கு செல்வாக்கு அதிகம் இருப்பதைத் தவிர்க்கமுடியாதுதான். ஆனால் அறிவாளிகளான சிறுபான்மையோரை அடக்க வேண்டும் என அவர்கள் என் அவர்கள் எண்ணவேண்டும்? அவர்கள் அப்படி நினைத்த போதிலும், நடுநிலைமையையே வகிக்கவேண்டிய ஆட்சிக்காரர்கள்தான் என் வாளாவிருக்க வேண்டும்?

நமது அரசியலமைப்பில் முக்கியப் பங்கெடுத்துக்கொள்ளுகிற சட்டசபையினர் சட்ட

சபைகளிலும் இதரவிடங்களிலும் சொற்பொழிவாற்றும் ஸமயங்களிலும் நாம் நேரிலிருந்து கேட்டால் பல உண்மைகள் நமக்குப் புலப்படும்.

நமது ஸமூஹத்தில் வேரூன்றியிருக்கும் பலவுயர்ந்த கொள்கைகளை நிந்தித்தும் ஸமூஹத்தில் உள்ள சிறுபான்மையோரிடம் ஆனால் அறிவிலேயே சிறுபான்மையோர் என்று சொல்லமுடியாதவர்களிடம் த்வேஷபுத்தியுடனும் அவர்களை இழிவுபடுத்தும் முறையிலும் ப்ரசாரங்கள் செய்தும் வருகிறவர்கள் விஷயத்தில் என் கண்டிப்பான கொள்கை அனுஷ்டிக்கப்படவில்லை எனக் கேட்கப்படும் ஸமயம் சட்டத்தைச் சரணமடைகின்றனர் சில அதிகார வர்க்கங்கள்.

'சட்டம் ஒரு கழுதை' என்ற வாக்கை மெய்ப்பிக்கின்றனர். ஒரேவிதமான சட்டத்தைக்கொண்டு ஒருவருடைய செய்கையை வகுப்புத் துவேஷத்தைத் தூண்டுவதாகக் கண்டித்துக் கூறியும் மற்றொருவருடைய செய்கையைக் கண்டிக்க முடியாமையைக் கூறியும் வருவது எவ்வளவு நேர்மையென்பதை அறிவாளிகளில் மத்யஸ்தநோக்குள்ளவர்கள்தான் முடிவு செய்யவேணும். பெரியவர்கள் அந்தரங்கவிஷயங்களை, சிறுவர்களின் முன்னிலையில் பஹிரங்கமாக்கினால், பிறகு சிறுவர்களின் போக்கைக் கண்டு வருந்துவதில் என்ன பிரயோஜனம்?

சிறுவர்களுக்கு ஒத்துழையாமை இயக்கத்தைக் கற்பித்த பெரியவர்களே, இப்பொழுது சிறுவர்களின் போக்கைக் கண்டு வருந்துவதை நாம் பார்க்கிறோம். சிறுவர்களைக் குறை கூறுவதில் பலனில்லை.

இதேபோல்தான் ஜாதி, மத, வகுப்புவாத வேற்றுமைகள் அற்ற ஸமதர்ம சோஷலிஸ ஸமுதாயக் கொள்கைகள் என்று சொல்லிக்கொண்டு மேடுகளைப் பள்ளங்களாக்கிக் கொண்டேபோனால் ஸமநிலங்களற்ற பள்ளங்கள்தான் முடிவில் தென்படும் என்பது இப்பொழுது உணருவது சிரமமான விஷயந்தான்.

பேச்சுசுதந்திரமென்பது ஸமூஹத்திலுள்ள ஸஹோதரர்களை தூஷிப்பதாகாது. எந்த ஸமூஹ்த்தில் அமைதியுடன் மக்கள் எல்லோரும் வாழ்ந்துவந்தார்களோ, அதே ஸமூஹத்தில் ஸஹோதரத்துவம் இல்லையென்று குறை கூறி, தாழ்த்தப்பட்டோரை உயாத்தவும், உயர்ந்தோரென்பவர்களை தாழ்த்தவும், முயற்சித்தார்களோ, அந்த ஸமூஹத்தின் தத்கால நிலை முன்னிருந்ததைவிட பன்மடங்கு கேவலமாகிவிட்டது.

எந்த தாழ்த்தப்பட்டோருக்காக பூனா ஒப்பந்தம்போன்ற ஒப்பந்தங்களெல்லாம் செய்துகொண்டார்களோ, அத்தாழ்த்தப்பட்டோர்களுக்கென்று கொடுக்கப்பட்ட சலுகைகளெல்லாம் வழலுக்கு இறைத்த நீராயிற்று.

கல்வி, பொருளாதாரத்துறைகளிலெல்லாம் சலுகைகளைப் பெற்ற அம்பேத்கார் கோஷ்டியினர் ஹிந்துமதத்தில் இப்பொழுதும் நியாயம் காணவில்லையாம். அதற்காக பௌத்தர்களாகி நியாயங்களை நிலை நிறுத்தப்போகிறார்களாம். கலிகாலமநு என்று சிலரால் கூறப்பட்ட அம்பேத்கார் கலிகாலபுத்தராகவும் மாறலாம். அன்பை அடிப்படைத் தத்துவமாகக்கொண்ட புத்தர் ஹிந்துமதத்தினிடம் துவேஷத்தையடிப்படையாகக்கொண்ட புத்தராகிறார் என்றே சொல்லவேண்டும்.

மதமாற்றம் ஏற்பட்டாலும் சலுகைகள்மட்டும் நீடித்தல் வேண்டுமாம். என்னே மதத்தின் உண்மைகளைக் கண்டுகொண்டது! (இவைகள் எல்லாம்) பொருளாதாரத்துறையில் போட்டியிட்டு வெற்றி பெறுவதற்கு மதம் ஓர் போர்வை போலல்லவா ஆகிறது.

இதே கொள்கைகளைப் பின்பற்றுகின்றனர் முஸ்லீம்லீகர்கள். இரத்தப் பெருக்கைக்கண்டு அஞ்சாத முஸ்லீம்களின் மதவிஷயங்களில் தலையிட அஞ்சும் அரசாங்கம் தங்கள் ஆஸ்தை முழுவதையும் இந்துமதத்தை சீர்படுத்துவதிலும், அறநிலையங்களை தங்கள் கருத்துக்கேற்ப ஒழுங்குபடுத்துவதிலும், செலவு செய்யுங்காலத்தில் மற்றைய மதத்தினர் தங்கள் மதங்களில் தலையிடுவதாக புகார் கூறுவதுதான் விந்தையிலும் விந்தை. இம்மாதிரி குறை கூறுவதுதான் தங்களைக் காப்பாற்றிக்கொள்வதற்குத் தகுந்த மார்க்கம் என்பதை அவர்கள் உணர்ந்து அந்த வழியைக்கடைபிடிக்கிறார்கள்.

இம்மாதிரி செய்யாமல் ஹிந்துக்கள் ஸாத்விகமுறைகளில் தங்கள் குறைகளை எடுத்துக் கூறுகின்றனர். ஆனால் வெற்றியடையக் கூடவில்லை.

இதுதான் ஸாத்விகத்தின் வெற்றியா என்றுகூட எண்ணவேண்டியிருக்கிறது.

மதக்கொள்கைகளைக் காப்பாற்றவேண்டி ஒருவர் உண்ணுவ்ரதம் இருந்தால், தற்கொலை செய்துகொள்ள முயற்சிப்பதாகக் குற்றச் சாட்டு. அரசியல் துறையில் இதையே பின்பற்றினால் தியாகமும், வீரமும், தலைசிறந்து விளங்குவதாகப் புகழப்படுகிறது. இதையெல்லாம் கண்டுதான் 'சட்டம் ஒரு கழுதை' என்கிறார்கள் சட்டமறிந்தவர்கள்.

தத்காலம் ஒரு குறிப்பிட்ட ஸமுதாயத்தைத் தூஷிக்கும் கக்ஷிகளே அநேகம். மற்ற துறைகளில் பல்வேறு கக்ஷிகளுக்கு வேற்றுமையான லக்ஷ்யங்கள் இருந்தபோதிலும் ஒரு குறிப்பிட்ட ஸமுதாயத்தை நிந்திப்பதிலோ, துன்புறுத்துவதிலோ பலரும் ஒற்றுமையாகின்றனர். ஸாத்விகர்களிடம் மர்யாதை காட்டும் காலம் ஒன்று இருந்தது என்று சரித்திர மூலமாகத்தான் இனித்தெரிந்துகொள்ளவேண்டும்.

ஸமீபகாலத்தில் லார்டு வெலிங்க்டனிடம் அஹிம்ஸா இயக்கம் வெற்றியடையாததின் காரணம், அஹிம்ஸாதத்துவத்தின் குறைபாட்டினால் அல்ல. அதைக் கையாளுமிடம் தகுந்ததல்ல என்பதுதான். அதே இயக்கம் லார்டு இர்வின் காலத்தில் சற்று பயனளித்தது என்றால் அதன் காரணம் லார்டு வெல்லிங்க்டனுக்கும், லார்டு இர்வினுக்கும் உள்ள குணபேதங்கள்தான் காரணம். சரித்திரத்தில் நாம் படித்த லார்டு வெல்லஸ்லி போன்றவர்களிடமோ ஔரங்கசீப்பினிடமோ இந்த இயக்கங்கள் எம்மாதிரியான வெற்றியை அடையும் என்பதை மராட்டியர்களுடையவும் சீக்கியர்களுடையவும் சரித்திரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

நமது ஸமூஹம் ஸம்பந்தப்பட்டவரையில் நாம் இதுஸமயம் அதே நிலையில்தான் இருக்கிறோம். நமது ஸமூஹத்தைச் சீர்திருத்திக் கொள்ளவேண்டும் என்பது ஒருபுறமிருக்க, நமது தர்மங்களையே அழித்திடும் தீயசக்திகளைத் தடுத்து நிறுத்தவும் வேண்டிய வழிகளையும் நாம் இப்பொழுதே தேடிக்கொள்ளவும் வேண்டும்.

தத்காலம் நிலசீர்திருத்தம் ஸம்பந்தமாக ஏற்பட்ட நியாயவாரசட்டத்தை எதிர்த்துப் போராடவேண்டும் என்று சிறு நிலசுவான்தார்கள் யோசனை செய்துவருகிறார்களல்லவா? சட்டசபை அங்கத்தினர் ஸ்தானங்களுக்குத் தங்கள் கொள்கைகளைக்கொண்ட அங்கத்தினர்களைத் தேர்தலுக்கு நிற்கவைக்கவேண்டும் என்றும் பலர் யோசனைகளைக் கூறுகிறார்கள். ஆனால் சிலரோ, காங்கிரஸ்ஸை எதிர்த்து நிற்பது சரியல்ல என்றும், இம்முறை வெற்றிகரமாகாது என்றும் கூறுகிறார்கள். ஆனால் முடிவு எப்படி இருப்பினும் நியாயத்தைக் கூற பயப்படக்கூடாது. நியாயத்தை நிலை நிறுத்த முயற்சிக்கவும் வேண்டும். நியாயம் ஒருகாலத்தில் வெற்றிபெறுமல் இருக்கலாம். எக்காலத்திலும் எல்லோரிடத்திலும் வெற்றியடையாதென்று சொல்லமுடியாது. ஒருவாராகவே விடப்பட்டாலுங்கூட நியாயத்திற்திற்காகத் தனித்துப் போராடவேண்டியதுதான். இறுதியில் வெற்றி ஏற்படும் என்பதில் ஸந்தேஹமே இல்லை. இடையிடையே கஷ்டநஷ்டங்கள் ஏற்படலாம். அதனாலென்ன? முடிவில் ஸந்தோஷம் கிடைக்கும் என்று நியாயவாதிகள் நியாயத்திற்காகப் போராடவேண்டியதுதான்.

தனிப்பட்ட மிராசுதாரர்கள் கஷ்டமின்றி நிலத்தின் வருவாயை அடைகிறார்கள். நிலத்தில் உழைத்துப் பயிரிடும் குடியானவர்களுக்கு லாபம் குறைவு என்றெல்லாம் பலவிதமாக வாதித்து குடிகளுக்கே முடிவில் நிலத்தைச் சொந்தமாக்கும் நோக்கத்துடன் இம்மாதிரியான சட்டங்களை இயற்றிவருகின்றனர்.

எம்மாதிரியான நோக்கமும் எக்காலத்தில் எல்லாவிடங்களிலும் சரியானதே எனக் கூற முடியாதல்லவா?

பண்டைக்காலந்தொட்டு பல ஆஸ்திகர்கள் மதக்கோட்பாடுகளை உத்தேசித்து மதச்சின்

னங்களாகிய ஆலயங்களும், மடங்களும் செழித்தோங்கவேண்டும் என்று தங்களுடைய ஸ்தாவரஜங்கமசொத்துக்களை இவைகளுக்கென்றே விட்டுக்கொடுத்திருக்கிறார்கள். நாளடைவில் இந்த ஸ்தாபநங்களும் தங்களுடைய வருவாயைக்கொண்டும் மேலும் ஸ்தாவர ஜங்கமசொத்துக்களை விருத்தியாக்கிக் கொண்டன. ஸமீபத்தில் ஏற்பட்ட நியாயவாரசட்டம் இம்மாதிரியான தேவாலயங்களினுடையவும் மடங்களினுடையவும் நிலங்களின் வருவாயையும் குறைக்கும் என ஏற்படுகிறது. இது மிகவும் வருந்தத்தக்க நிலைமை. தனிப்பட்டவர்கள் அதிக லாபமடைவதைத் தடுப்பதும் பொது ஜனங்கள் பெருவாரியாக லாபத்தைப் பங்கிட்டுக்கொள்வதுமே நோக்கமாயின் ஸமூஹத்தின் பொது நலன்களையே நோக்கமாகக்கொண்ட தர்மஸ்தாபனங்களின் வருவாயைக் குறைக்காமல் இருப்பது நியாயமில்லையா? இந்த நியாயம் ஏன் சட்டசபையிலுள்ளவர்களுக்குக்கூடத் தோன்றவில்லை? இதிலிருந்து இவர்களுடைய ஆஸ்திக்யநோக்கத்தை ஓரளவு ஊகிக்கமுடிகிறதல்லவா?

நிலங்களும் அவைகளிலிருந்து கிடைக்கும் வருவாயும் மழையின்மை முதலிய தெய்வீகத் தன்மையினால் குறைவது என்று மட்டுமில்லாமல் மனுஷ்யர்களுடையவும், அவர்களுக்கென்று ஏற்பட்ட அரசாங்கத்தினரின் கொள்கைகளினாலும் குறையும் என்பது கண்கூடு. இதே போல் மற்றைய ஸ்தாவர, ஜங்கம சொத்துக்களுக்கும் இடையூறுகள் எக்காலமும் ஏற்படலாம்.

இம்மாதிரியான நோக்கம் நமது ஸமூஹத்தினரிடையே பரவுமாயின், தனிப்பட்டவர்களின் ஸமூஹநலக் கொள்கைகளில் மாறுதல்களும் நாளடைவில் நாட்டின் பொருளாதாரத் துறையில் பற்பல மாறுதல்களும் ஏற்படும் என்பது நிச்சயம்.

அமைதியின்மை என்பது ஸர்வஸாதாரணமாகும் என்பதும் நிச்சயம். தர்மஸ்தாபனங்கள் நன்று நடைபெறாமல் இருக்க நேரிடுமாயின் நாட்டின் மக்களின் தன்மை தத்கால நிலைமையைவிட இன்னும் கேவலமாகி முடிவில் எந்நிலையில் கொண்டுபோய்விடும் என்று சொல்வதற்கில்லை.

* * * * *

ஸம்ஸ்க்ருத கமிஷன்

ஸம்ஸ்க்ருதாபிவ்ருத்தியைப்பற்றி யோசனைகள் கூறுவதற்காக இந்திய மத்திய அரசாங்கம் ஓர் கமிஷனை ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஸம்ஸ்க்ருதத்தை எவ்வாறு ப்ரசாரம் செய்யலாம், அப்பாஷையில் ப்ராவீண்யமடைகிறவர்களுக்கு பொருளாதாரத்துறையில் எப்படி முன்னேற்றமான வழிகள் ஏற்படும் என்றெல்லாம் ஆராய்ந்து கூறுவதே இந்தக் கமிட்டியினரின் வேலையாகும்.

யார் எப்படி விவாதித்தாலும் ஸம்ஸ்க்ருதம் ஒருகாலத்தில் பேசும் மொழியாக இருந்தது என்பதில் ஸந்தேஹமில்லை. சிலப்பதிகாரத்துத் தமிழுக்கும், நவீனத் தமிழுக்கும், இலக்கியத் தமிழுக்கும், பேசும் தமிழுக்கும் எவ்வளவு வித்யாஸங்கள் தென்படுகின்றனவோ, அவ்வளவு வித்யாஸங்கள் நாளடைவில் ஸம்ஸ்க்ருதத்தின் விஷயத்திலும் ஏற்பட்டு இலக்கியங்களில் கையாளப்பட்ட ஸம்ஸ்க்ருதம் அதன் புனிதத்தன்மையை விடாமல் காப்பாற்றப்பட்டதாக ஆகிற்று. ஸம்பாஷணைக்கென்றே உபயோகப்படுத்தப்பட்ட ஸம்ஸ்க்ருதம் பல்வேறு பாஷைகளாக மாறிற்று.

இக்காரணத்தினால்தான் ஸம்ஸ்க்ருத நாடகங்களில் சிலர் சுத்த ஸம்ஸ்க்ருதத்திலும், சிலர் ப்ராக்ருதாதிபாஷைகளிலும் பேசுவதென்ற ஸம்ப்ரதாயம் ஏற்பட்டது.

தத்காலம் பற்பல காரணங்களால் ஸம்ஸ்க்ருதம் அநாதரிக்கப்படுகிறது. முக்யமான காரணம் பொருளாதாரத்தைப்பற்றியது. நமது அரசாங்கத்தில் உத்யோகம் வஹிப்பதற்கென்று ஏற்பட்ட நியமங்களில் சில ஸம்ஸ்க்ருதம் படித்தவர்களுக்கு அநீதி விளைவிப்பதாக இருக்கிறது. அரசியல் சாஸனத்தில் காணப்படுகிற பல பாஷைகளில் ஸம்ஸ்க்ருதமும் ஒன்று. அப்படியிருந்தும் ஏன் இந்த வேற்றுமையை ஸம்ஸ்க்ருதத்தின் விஷயத்தில் நமது அரசாங்கத்தில் கடைபிடிக்கவேண்டும்

என்பது புலனாகவில்லை. இம்மாதிரியான தடங்கல் நீக்கப்படவேண்டும்.

ஸம்ஸ்க்ருதம் (மேல்படிப்புக்கென்று) படிப்பவர்களுக்கும் பொது அறிவு ஏற்படும் வகையில் பாடதிட்டங்களை வகுத்துத் தந்து, அவர்களுக்கு படிப்பு முடிந்து வெளியேறியவுடன் இதர அரசாங்க அலுவல்களுக்குத் தகுதியுள்ளவர்களாகத் தீர்மானிக்கப்படவேண்டும்.

ஸம்ஸ்க்ருத ஆராய்ச்சிக்கோ, உயர்தரப் படிப்புக்கோ அரசாங்கம் அதிகமான ஆதரவு அளிக்கவேண்டும்.

அரசாங்கமோ, ஸர்வகலாசாலைகளோ நடத்தும் பரீக்ஷைகள் படிப்புத் திறமையை நிர்ணயிக்கும் நிலைமை நாட்டில் உள்ளவரை ஸம்ஸ்கிருத பாடங்களைப் படிப்பவர்களும், அம்மொழியை போதிக்கும் பாடசாலைகளுக்கும் அவைகளுக்குத் தக்கமுறையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பரீக்ஷைகளுக்கு ஸம்ஸ்க்ருதத்தையும் இதர பாடங்களையும் தனிப்பட்ட முறையில் கற்றவர்களை யாதொருவித நிர்ப்பந்தமுமின்றிக்கே அநுமதிக்க வேண்டும்.

ப்ரதேசமொழிகளிலும், ஆங்காங்குள்ள தாய் மொழிகளிலும் எழுதப்படும் புத்தகங்களுக்கு அரசாங்கம் ஊக்கங்கொடுத்து பரிசுகள் வழங்குவதுபோல் ஸம்ஸ்க்ருதத்திலும் புத்தகங்கள் எழுதும்படி உத்ஸாஹமூட்டி அம்மாதிரி புத்தகங்களுக்கும் பரிசுகள் வழங்குதல் வேண்டும்.

ஸம்ஸ்க்ருதாபிவ்ருத்திக்கென்றே ஏற்படுத்தப்பட்டிருக்கும் கமிஷன் நம் நாட்டில் பல்வேறு இடங்களுக்குச் சென்று பலரைப் பார்த்து நன்கு விசாரித்து தத்காலம் அம்மொழிக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளை நீக்குவதுடன் அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்படும் மொழிக்குள்ள கௌரவமான நிலையை அதற்கு ஸர்வவிதத்திலும் ஏற்படுத்தும்படி தக்க சிபாரிசுகளை மத்ய அரசாங்கத்திற்குச் செய்வார்கள் என நம்புகிறோம்.

—:0:—

ஸ்ரீ:

செய்திகள்

ஆசார்யர்களின் திருநக்ஷத்ரமஹோத்ஸவங்கள்

ஸ்ரீரங்கம்

பத்ரிகையில் குறிப்பிட்டுள்ளபடி 3-10-56 தொடங்கி 9-10-56 வரை ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் உத்ஸவம் வெகு விமர்சையாக நடந்தது. 10-10-56ல் இயற்பா சாற்றுமுறையும் நடந்தது.

தசாவதாரன்ஸந்நிதியில் தேசிகன்உத்ஸவம் 8-10-56ல் தொடங்கி 13-10-56ல் சாற்றுமுறையாயிற்று. அன்று ஸ்ரீ தேசிகனும், ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனும் வடதிருக்காவேரியில் தீர்த்தவாரி கண்டருளினார்கள். 10மணிக்கு சாற்றுமுறை கோஷ்டி நடந்தது. தீர்த்தவாரியின்போது அநேக ஸ்வாமிகளும்ஸ்த்ரீ பாலவ்ருத்தர்கள் யாவரும் ஸேவித்துஅவப்ருதஸ்நாநமும் செய்தார்கள்.

கோயில் தேசிகன் ஸந்நிதியில் 7-10-56ல் தேசிகனுத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டு 13-10-56ல் சாற்றுமுறை மிகவும் நன்றாக நடந்தது. விடாயாத்தி உத்ஸவத்தின்போது ஸ்ரீ. உப. மதுராந்தகம், வீரராகவாசாரியஸ்வாமி ஸ்ரீ உப. சின்னமு, ஸ்ரீநிவாஸபாட்ராசார்யஸ்வாமி ஸ்ரீ. உப. வில்லிவலம், நாராயணாசார்யஸ்வாமி ஸ்ரீ. உப. தோட்டாலம், வேணுகோபாலாசாரியஸ்வாமி, ஸ்ரீ. உப. ஸ்ரீமுஷ்ணம், ராமதேசிகாசார்யஸ்வாமி, ஸ்ரீ. உப. கோஷ்டீபுரம், தாமோதராசார்யஸ்வாமி முதலிய வித்வான்கள் ஆசார்யர்களின் மஹிமையைப்பற்றி மிக அழகாக உபந்யாஸம் செய்தார்கள்.

அ. நரஸிம்ஹ ஐயங்கார்,
கௌரவ மானேஜர்,

திருநாராயணபுரம்

ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் அவதாரஸ்தலமான இவ்வூரில் ஸ்ரீ ஸ்வாமி திருநக்ஷத்ரமஹோத்ஸவம் நன்றாக நடந்தது. 3 தினங்கள் வேதப்ரபந்தபாராயணங்களும் ததீயாராதனமும் நடந்தன. சாற்றுமுறைதினம் வழக்கம்போல் ஸ்வாமியின் ப்ருந்தாவனத்திற்கு செல்வப்பிள்ளை எழுந்தருளினார். அங்குள்ள மண்டபத்தில் விசேஷ தளிகைகள் அமுதுசெய்து ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனுக்கு மாலை பரியட்டம் முதலிய மரியாதைகள் வழக்கப்படி அருளப்பாடுடன் நடந்தேறியது. கோஷ்டிக்கு தீர்த்தவினியோகாதிகள் ஆனதும் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளினார்.

கஸ்தூரி ஸ்ரீநிவாஸாசாரியர்,
ஆராதகர், ஸ்ரீ அஹோபிலமடம்.

ஸ்ரீ வில்லிபுத்தூர்

திருக்கேட்டையன்று வழக்கம்போல் திருமஞ்சனம், திருவாராதனமாகி, ஸேவை ஆனவுடன் தோளுக்கினியானில் வீதிப் புறப்பாடாகி தேசிகன் ஸந்நிதிக்கு எழுந்தருளினார். பிறகு கற்பூரஹாரத்தி ஆகி மாலை, பரியட்டம் நடந்து தளிகை அமுது செய்தானவுடன் கோஷ்டிக்குத் தீர்த்த வினியோகமும் நடந்தது, அவ்வமயம் கோதாஸ்துதியும் ஸேவிக்கப்பட்டது.

மாடவீதிகள் புறப்பாடாகி மடத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அருளப்பாட்டுடன் மங்களாசாஸனமாகி தளிகையமுது செய்து சாற்றுமுறை ஆகி கோஷ்டி தீர்த்த விநியோகம், ததீயாராதனமும், ராத்திரி டோலோத்ஸவமும் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. தேசிகன் மங்களாசாஸனம் நடந்த ப்ரக்ரியையும் உத்ஸவத்தைக் குறைவின்றியில் நடத்திய ஆராதகர் ஸ்ரீசேஷய்யங்காருடைய சிரத்தையும் பாராட்டத்தக்கது.

S. சக்ரவர்த்தி தாஸன்
ஸ்ரீ அஹோபிலமடம் கௌரவ ஏஜண்டு

ஸ்ரீ அஹோபிலமடம், திருக்கோட்டியூர்

ஷை யூரிலுள்ள ஸ்ரீ தேசிகன் ஸந்நிதியும், அதைச்சேர்ந்த கட்டிடங்களும் ஸ்ரீஸந்நிதியில் ஒப்புவிக்கப்பட்டு, அங்கு ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனை ப்ரதிஷ்டை செய்து ஷை கட்டிடத்தில் ஸ்ரீ அஹோபிலமடம் ஏற்படுத்தப்பட்டு சென்ற ௵ முதல் ஸ்ரீ அழகியசிங்கரின் நியமனப்படி ஸ்ரீ தேசிகனுக்கும், ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கும் முறையே உத்ஸவங்கள் நடந்து வருகின்றன.

இவ்வருஷமும் ஷை உத்ஸவங்கள் 4–10–56 வியாழக்கிழமை ஆரம்பமாகி 9–10–56ல் செவ்வாய்க்கிழமை ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரசாற்றுமுறையும், 13–10–56 சனிக்கிழமை ஸ்ரீ தேசிகன் திருநக்ஷத்ரசாற்றுமுறையும் நடந்தன. ஷை உத்ஸவங்களில் தினந்தோறும் வீதிப்புறப்பாடும், ததீயாராதனங்களும் செவ்வனே நடந்தன.

உபயம் செய்தவர்களின் பெயர்

1-வது	திருநாள்—	ஸ்ரீ கோஷ்டீபுரம் ஸ்வாமி குமாரர் ஸ்ரீ ராமாநுஜாசாரியர்.
2-	,,	திருக்கோட்டியூர், ரெ. ஸ்ரீநிவாஸாசாரியர்.
3-	,,	ஷை கொ. ஸௌம்யமூர்த்தி அய்யங்கார்.
4-	,,	காரைக்குடி, கிடாம்பி, ஸ்ரீ ரா. ராஜகோபாலாசாரியர்.
5-	,,	நெடுமரம், ஸ்ரீ ஸௌம்யவரதாச்சாரியர். இரவு புறப்பாடு தளிகைகள் ஸ்ரீ எஸ். ஜகந்நாதய்யங்கார் நெடுமரம், ஸ்ரீ K. ஸ்ரீநிவாஸய்யங்கார்.
6-	,,	ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ர சாற்றுமுறை உள்பட நெடுமரம், ஸ்ரீ கொ. ஸுந்தரராஜ ஐயங்கார்.
7-	,,	காரைக்குடி (திருக்கோட்டியூர்) ஸ்ரீ எஸ். சேஷய்யங்கார்.
8-	,,	மதராஸ் ஸ்ரீ ஆர். கேசவய்யங்கார் (அட்வொகேட்)

9-வது நாள் திருக்கோட்டியூர் (அப்பாகுடி) ஸ்ரீ எஸ். வெங்கடேச ஐயங்கார்
10 ,, ஸ்ரீ தேசிகன் சாற்றுமுறை ஸ்ரீ டி. பார்த்தஸாரதி ஐயங்கார் (அட்வொகேட்)
T, பார்த்தஸாரதி ஐயங்கார் (அட்வொகேட்)

மதுராந்தகம்

பத்து தினங்கள் ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகனுத்ஸவம் நன்றாக நடந்தது. சாற்றுமுறைதினம் ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி ஸந்நிதிகளில் வழக்கம்போல் வெகு விமர்சையாக மங்களாசாஸனம் நடந்தேறியது. மங்களாசாஸனமாகி எழுந்தருளும்போது நமது கலாசாலையில் மண்டபப்படி விசேஷமாக நடந்தது.

இம்மஹோத்ஸவங்கள் வடுவூர், காஞ்சீபுரம் மாம்பலம், திருவல்லிக்கேணி, திருவள்ளூர், திருவனந்தபுரம் முதலியவிடங்களில் நன்றாக நடந்ததாக செய்திகள் கிடைத்திருக்கின்றன. அவகாசக்குறைவினால் பூராவிவரத்தையும் ப்ரசுரிக்கமுடியவில்லை.

(ஸம்பாதகர்)

ஸ்ரீ மஹாபாரத உபந்யாஸம், ஸ்ரீவில்லிபுத்தூர்

ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ அஹோபிலமடத்தில் ஆவணி மீ 22வ ஆராதகர் ஸ்ரீ. உப. சேஷய்யங்காரால் விராடபர்வம் உபக்ரமிக்கப்பட்டு நடந்து வந்தது. புரட்டாசிமீ 16வ உத்தரா கல்யாணத்தன்றுஉபயகலையார்களும் அரையர் ஸ்ரீ.உப. வடபத்ரசாயி ஐயங்கார்ஸ்வாமி முதலான ப்ரமுகர்களும் வந்திருந்து ஸந்நிவேசத்தின் அழகையும் அநுபவித்து இதுமாதிரி புராணப்ரவசனம் நடந்துகொண்டிருக்கவேண்டுமென்று ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் ப்ரார்த்தித்துவிட்டு ஆராதகர் சேஷய்யங்காரையும் ப்ரவசனம் பண்ணிக்கொண்டே இருக்கவேண்டுமென்று ஆசீர்வசனங்கள் சொல்லிவிட்டு மேளவாத்யத்தோடு அவர் திருமாளிகையில் கொண்டு சேர்த்து தாம்பூலம் வழங்கப் பெற்றார்கள்.

ஸ்ரீ அழகியசிங்கர் திருவடியில் மிகுந்த பக்தியுள்ள (வத்திராயிருப்பு) செல்லம்மாளாலும் இதரர்களாலும் பட்டு வேஷ்டி, புடவை, வெள்ளிக்கும்பா முதலான சாமான்கள் சன்மானமாகக் கொடுக்கப்பட்டன. எல்லோரும் கேட்டுக்கொண்டபடி இன்றுமுதல் உத்யோகபர்வம் ஆரம்பிக்கப்பட்டு நடந்துவருகிறது.

S. சக்ரவர்த்திதாஸன்
கௌரவஏஜண்ட்

ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை, ஸ்ரீரங்கம்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீ அஹோபிலமடம் ஓரியண்டல் பாடசாலையில் தீபாவளிக்காக புதன்கிழமை (31-10-56) காலை இப்பாடசாலை மாணவமாணவிகளுக்கு ஸ்ரீ அழகியசிங்கர் அநுக்ரஹத்தை முன்னிட்டு ஸ்ரீ வியாஸராய மடாதிபதிகளும், ஸ்ரீ திரிதண்டிமத்வஸ்வாமிகளும் பாடசாலை மாணவமாணவிகளுக்குக் கொடுத்த திரவியத்தைக்கொண்டும், ஸ்ரீமான் ஜட்ஜ் ராகவய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீமான் M. P. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, ஸ்ரீமான் கஸ்டம்ஸ். K. R. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி, ஜயம்மாள், ஸ்ரீமான் C V. ராஜகோபாலாசார்யஸ்வாமி, இவர்களுடைய திரவிய ஸஹாயத்தைக்கொண்டும் புதிய வஸ்திரங்களும், எண்ணெய், சீயக்காய்ப்பொடி, மத்தாப்புகளும் வாங்கப்பட்டன. உத்தரவீதிமடத்திற்கும் தசாவதாரஸந்நிதிக்கும் யதோசிதமாய் புதிய வஸ்திரங்கள் ஸமர்ப்பிக்கப்பட்டன. K. ஸ்ரீநிவாஸாசாரியர், ஹெட்மாஸ்டர்

P. R. ஸ் கோயிலில் ஸ்ரீதேசிகன் சாற்றுமுறை

இங்கு 3 நெ, இல்லத்தில் புரட்டாசி மீ 28 வ (23-10-56) சனிக்கிழமை ஸ்ரீ தேசிகனவதார உத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டு ப்ரதிதினம் காலை மாலை இரண்டு வேளைகளிலும் ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்திகள் பாராயணம் நடந்தன சாற்றுமுறையன்று (22-10-56) மாலை 'தாலூராம் ஜயநாராயண்' கீதாபாடசாலையின் மாணவர்கள் வேதாந்தவிஜ்ஞானசபையின் சார்பாக ரகுவீரகத்யம், ஸ்ரீ தேசிகமங்களாசாஸனம் முதலியவைகளில் பரீக்ஷிக்கப்பட்டு அதில் முதல் பரிசு A நரஸிம்ஹனுக்கும் இரண்டாம் பரிசு L. புருஷோத்தமனுக்கும் S.தேவநாதனுக்கும், மூன்றாம் பரிசு R. ராதாவுக்கும் கிடைத்தன. பிறகு சாற்றுமுறையை ஷேபேட்டை வாஸிகள் அனைவரும்கூடி சிறப்பாக நடத்திவைத்தார்கள். அவ்வமயம் ஸ்ரீ உப மேல்மா, நரஸிம்ஹாச்சாரியர்ஸ்வாமி, முக்கூர் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி நெல்லூர், ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஸ்வாமி (ஸேவா) K. வரதாசார்யஸ்வாமி போன்ற வித்வான்கள் ஸ்ரீ தேசிகனின் பெருமையை எடுத்துக் கூறினார்கள்.

M. Y. சேஷாத்திரி

ஸ்ரீ:

ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த முமுக்ஷு யார்?

ஸ்ரீ தேசிகன் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்திலே முமுக்ஷுத்வாதிகாரத்தின் முடிவில் ஒரு ச்லோகம் அருளிச்செய்துள்ளார். அந்த ச்லோகமாவது:—

विषमधु बहिष्कुर्वन् धीरो बहिर्विषयात्मकं
परिमितरसस्वात्मप्राप्तिप्रयासपराङ्मुखः ।
निरवधिमहानन्दब्रह्मानुभूतिकुतूहली
जगति भविता दैवात् कश्चिज्जिहासितसंसृतिः ॥

என்றதாம். ஒருவன் முமுக்ஷுவாகவேண்டுமானால் அதற்குக் கீழ்ப்பட்ட புருஷார்த்தங்களிலே நசையறவேண்டும். அவையாவன ஐச்வர்யமும், கைவல்யமும். கைவல்யமென்றது தனித்த ஜீவாத்மாவின் அநுபவம். அது எளிதில் வரக்கூடியதன்று. அதிலுள்ள தோஷங்களை முன்னமேயறிந்தானாகில் அதற்காக ப்ரயாஸப்படுவதை நிறுத்திக்கொள்வான்: அதனால் அதினின்று தன்னை யொருவன் மீட்டுக்கொள்ளலாம். ஐச்வர்யங்களை விடுவதுதான் மிக ப்ரயாஸ ஸாத்தியம். ஏனெனில், விஷயங்கள் இவனுடைய புலன்களில் புலப்பட்டவண்ணமே யிருக்கின்றன. அவை ஒருவாறு இன்பத்தையும் ஊட்டுகின்றன. இவ் வின்ப விஷயங்களே கூட விஷத்தையும் கூட்டி வைத்திருக்கின்றன வென்பதை அவனவன் அநுபவமூலமாகவும் உபதேசமூலமாகவும் ஆராயவேண்டும். அவ் வாராய்ச்சியைப் பெறாதபோது இன்பமூட்டும் அவ் விஷயங்களை விட்டுவிடான். ஆராய்ச்சி பிறந்த பிறகும் அவற்றை விடுவது எளிதிலாகாது. விவேகமும் துணிவுமிரண்டும் மிகவாக வேண்டும். இவ்விரண்டும் **धीरः** என்ற பதத்தால் அறிவிக்கப்படுகிறன. **'पराञ्चि खानि व्यतृणत् स्वयम्भूः तस्मात्पराङ् पश्यति नान्तरात्मन् । कश्चिद्धीरः प्रत्यगात्मानमैक्षदावृत्तचक्षुरमृतत्वमिच्छन्'** என்று கடவல்லியில் ஓதியதை யிங்கே யநுஸந்திக்கச் செய்தபடி.

இப்படி வெளி விஷயங்களை விஷம் கலந்திருப்பது காரணமாக விடுகிறவனுக்கு அக் கலப்பில்லாத ரஸத்தை யநுபவிப்பதில் ருசியுண்டானபடியாலே ஜீவாத்மாவான தன்னை யநுபவிப்பதில் இழிய அவகாசமுண்டு. கைவல்யாநுபவகாலத்தில் சிறிதும் துக்கமில்லை. அவ்வநுபவம் பிற்காலத்தில் ஒருவனை துக்கத்திற்கும் தான் காரணமாவதுமில்லை. அதற்கு முயலுகிறவன், 'இப்ரயாஸம்நமக்கேன்' என்று அதை விடவேண்டுமானால் அது பரிமிதமென்றறியவேண்டும். அதாவது— சிறந்த ஆநந்தமாய் ஸர்வவ்யாபியான பரமாத்மாவின் அநுபவமெங்கே? அதைவிட நிக்ருஷ்டமாய் அணுமாத்ரமான ஜீவனின் அநுபவமெங்கே? இவ்வநுபவந்தானும் ஸ்திரமுமன்று. இப்படிப் பரிமிதமான ஆத்மாநுபவத்திற்காகத் தனி ப்ரயாஸம் செய்யாமல், ஜீவாத்மாவைக் காணாமல பரமாத்மாவைப் பார்க்கல் ஸாத்யமாகாதாகையாலே உள்ளிருக்கும் மாணிக்கத்தைப் பெறக் கிழிச்சீரையைக் காண முயலும் கணக்கிலே முயன்று ஆத்மாவைக் கண்டு அதன் அநுபவமாம் கைவல்யத்தைக் கோலாமல் உடனே பரமனைப் பெற பக்தியிலிழிய வேண்டும். ப்ரபத்தியை மோக்ஷோபாயமாகப் பற்றுகிறவர்கள் ஜீவாத்மாவை யிங்குக் காணும் ப்ரயாஸத்தில் கூடச் சிறிதுமிழியாமல் பூர்ணமாகவே பராங்முகராக முமுக்ஷுக்களாகலாம்.

ப்ரம்மாநந்தமென்பது மஹாநந்தம். அதில் விஷக்கலப்பில்லை யென்பது மட்டுமன்று. அவ்வாநந்தம் மிகப் பெரியதுமாம், சிறந்ததுமாம். அது அளவற்ற ஆநந்தமானாலும் அதன் அநுபவமிவனுக்குச் சிறிதே ஏற்படுகிறதென்பதுமில்லை. அநவதிகமான அநுபவமுண்டு. எம்பெருமானின் அநுபவத்திற்கும் இவன் அநுபவத்திற்கும் வாசியில்லை. பரமஸாம்யத்தைப் பெறுகிறானே. அவ்வநுபவத்திற்கு உத்தராவதி அதாவது முடிவில்லையாகையாலும் அது நிரவதியாம்.

இவ்வளவு தாரதம்யமறிந்தும் ப்ரம்மாநந்தாநுபவத்திலே குதூஹலமும் மற்றவற்றில் வைராக்யமும் வருகிறதில்லை. இப்படி ஸம்ஸாரஜிஹாஸை பெறுகிறானென்றால் அது ஏதோ 'தைவாத்' வரவேண்டும். அப்படிப்பட்டவன் எவனோ ஒருவனேயாவான். என்ன பாரமார்த்திய ஜ்ஞாநமிருந்தாலும் இப்படி முமுக்ஷை பிறக்காது. இனி இந்த ச்லோகத்

தின் பொருள். இங்கே ஸ்ரீ தேசிகன் '**भविता**' என்று சொன்னதேன்? அவர் தாமே முமுக்ஷுவாயிருந்ததால், அக்காலத்தில் மற்றும் சிலர் சிஷ்யர் முதலானோர் முமுக்ஷுக்கள் இருந்ததால், அதற்கு முன்னும் ஆசார்யர்கள் அத்தகையவர் இருந்ததால், பிறகும் பலர் இருக்கப்போவதால் பொதுவாக '**भवति**' என்றே அருளலாமே யென வினா எழும். தம்முடைய க்ரந்தத்தை ஸம்ப்ரதாயமுகமாகக்கேட்டுப் பின்னால் சிலர் முமுக்ஷுக்களாவர் எனவறிவிப்பதற்காக என்ற விடை ஸாதாரணமானது. ஆகையால் இப்படி முமுக்ஷுவாக வரப்போகிறவர்களிலே சிறப்பு வாய்ந்த மஹான் ஒருவர் தோன்றப்போவதைக் கருத்தில் கொண்டே இவ்வாறு அருளிச் செய்திருக்க வேண்டுமென்றும், அம் மஹான் நம் ஆதிவண் ஸடகோப யதீந்த்ர மஹாதேசிகனே யென்றும் ஸ்ரீ பிள்ளைப்பாக்கம் ஸ்ரீ அழகிய சிங்கர் பணிப்பாராம். இவருக்குச் சிறப்பெனி எனில், ப்ரஹ்மசர்யத்திலே காலக்ஷேபம் செய்து ஸம்ஸாரப்பற்று சிறிதுமின்றி தீவ்ரமான வைராக்யத்தாலே ஸந்நியாஸம் பற்றினதே. இந்த விசேஷத்தை 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் அருளிச்செய்த ஸ்ரீ ஸாரபோதினீ என்ற உரையிற் காண்க.

இங்ஙனம் இவர் சிறு பிராயத்திலே ஸம்ஸாரஜிஹாஸையுள்ளவரானமை பற்றி இவருக்கு உடையவர், ஸ்ரீ தேசிகன் முதலானோரைக் காட்டிலுமுள்ள வாசியை யாராய்ந்தே ஸ்ரீந்ருஸிம்ஹன்நம்மாழ்வாரது திருநாமத்தையேஇவருக்குச் சாத்தினர். குருபரம்பரையில் உலகில் தோன்றினது முதல் வேறு பற்றின்றி அத்தைத்தின்று அங்கே கிடக்கும்படியைப் பாராமரித்துப் பெரும் புகழோடு விளங்கினவர் அவரேயல்லரோ? அவர்போலே இவர்தாமும் மவ்வாறாகி உலகெல்லாமுய்ய விசேஷ ப்ரயாஸம் கொண்டருளினர். அத் திருநாமத்திற்கேற்பத் திருவாய்மொழிக்கு விசேஷ ப்ரசாரத்தில் ஊக்கம் வைத்தருளி, ஈடு முதலான உரைகளும் உலகில் உலாவ வெகு ஆஸ்தை கொண்டருளினர். ஆழ்வார் அருளிச்செயல்களில் தத்துவத்தை வெளியிடும் பாகமும் உண்டு, ரஸோக்தியாய்க் கவி சமயத்தைப் பின்பற்றிவரும் பாசுரங்களுமுள. உரைகளும் ரஸோக்திப்ரதானமாய்ச் சிலவிடங்களிலிருக்கும். ஸத்ஸம்ப்ரதாயமாகத் தத்துவார்த்தத்திலே தெளிவுள்ளவனுக்கு எந்த உரையைக் கண்டாலும், உரையாளரும் ஆப்ததமராகில், அவர் கருத்தை இணங்குமாறு இசைவதற்கு ப்ரயாஸமிராது. அறியாதவர்களையும் அதன் கருத்தையறிவித்துத் தெளிவு உண்டு பண்ணவேண்டு மென்றும், அவ்வறிவுடன் ஆழ்வார் அருளிச்செயல்களைக்கொண்டு யாவரும் தெளியாத மறைநிலங்களைத் தெளிய வேண்டுமெனவும் அவா கொண்டு எல்லா உரைகளுக்கும் ப்ரசாரம் செய்வித்துத் தம் திருநாமத்தைப் பொருள்படச் செய்த பரமாசார்யரிவரென்க.

ஸ்ரீ:

ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

மஹாவீர வைபவம்

(15-வது ஸம் 7-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

அவந்த்ய- பலனுள்ள, மஹிம- ப்ரபாவமுடைய, முநிஜந- மதங்கமுனிவரின் சிஷ்யர்களான முனிவர்களை, பஜந- வெகு காலம் உபாஸித்ததால், முஷித- ஒழிக்கப்பட்ட, ஹ்ருதயகலுஷ- பொறாமை, த்ரோஹம் செய்ய விரும்புதல் முதலிய மனோதோஷத்தையுடைய, ஶபரீ- ஓர் வேடப்பெண்மணியின், மோக்ஷ- மோக்ஷப்ராப்திக்கு, ஸாக்ஷிபூத- ஸாக்ஷியாய் இருந்த ஸ்ரீ ராமபத்ர!

(க—ரை) வேடஜாதியிற் பிறந்து நற்குணங்கள் நிறையப்பெற்ற ஓர் பெண்மணி மதங்கமுனிவரின் சிஷ்யர்களாய் ப்ரஹ்மவித்துக்களாயிருந்த முனிவர்களின் ஆசிரமத்தையடைந்து வெகு காலம் அம் மஹர்ஷிகளுக்குப் பணிவிடை புரிந்து வந்தாள். இவள் செய்யும் பணிவிடையால் பெரிதும் மகிழ்ச்சி கொண்ட அம் மஹரிஷிகள் பரமாநுக்ரஹத்துடன் யோகசாஸ்த்ரத்தை யுபதேசித்தனர். அந்த யோகவித்யாலாபத்தினால் மனம் தெளிந்த அப் பெண்மணி பொறாமை முதலிய தீயகுணங்கள் நீங்கப் பெற்றாள். அன்பு, தயை, ஸந்தோஷம் முதலிய நற்குணங்களை எப்போதும் அவளிடம் குடிகொண்டிருந்தன. ப்ராஹ்மணன் முதலிய மூவர்ணத்தவர்களே யோகம் ஆரம்பிக்க உரிமைபெற்றவர்களாகையால் வேடப்பெண்மணி யோகம் செய்வது கூடுமோவெனில்; இப்பெண்மணியின் ப்ராஹ்மணாதி பூர்வஜந்மத்திலேயே யோகாரம்பம் ஏற்பட்டபடியால் இங்கு ஆசார்யர்களான முனிவர்கள் முன் ஜந்மத்தில் ஆரம்பித்த யோகத்தின் வளர்ச்சிக்காகவே யோகவித்யையை உபதேசிக்க, இவ் வேடப்பெண்மணியும் அநுஷ்டித்தாள் என்று கொள்வதில் ஒரு விரோதமுமில்லை. ப்ராஹ்மணன் முதலிய மூவர்ணத்தைச்சேர்ந்த ஓர் பெண்மணி ஶபரீ என்ற பெயருள்ளவள் எனக் கூறுவாருமுளர். ஸ்ரீமத்ராமாயண வ்யாக்யாநகர்த்தாவான ஸ்ரீ கோவிந்தராஜர்- ஓர் வேடஜாதிப்பெண் என்றே ஶபரீ என்ற பதத்திற்குப் பொருள் தருகிறார். நம் ஸ்வாமி ஸ்ரீ தேசிகனும் தயாசதகநூலில் ‚காபி ஶபரீ’ என்று கூறி, யாரோ ஒரு வேடஜாதிப்பெண் என்றே குறிப்பிடுகிறார். ஆகையாலிங்கு ஶபரீ என்பது அக்கிழவியின் பெயரல்ல என்றே நாம் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இவ் வேடப்பெண்மணி தன்னுடைய ஆசார்யர்கள் யோகப்ரபாவத்தினால் ஸ்ரீ வைகுண்டம் சென்ற பிறகும் சக்ரவர்த்தித் திருமகனாகிய ஸ்ரீ ராமபத்ரனை ஆராதித்து அவனருள் பெற்ற பிறகே ஸ்ரீ வைகுண்டம் செல்லத் தீர்மானம் செய்துகொண்டிருந்தாள். தேவரீர் ஸுக்ரீவமஹாராஜனைக் காணுமுன் உம்முடைய ஸேவையை விரும்பி நெடுங்காலம் காத்திருக்கும் தர்மசாரிணியான ஶபரியை அவசியம் கண்டருளல் வேண்டுமென்று தன்னிடம் கபந்தன் கூறியதையநுஸரித்து ஸ்ரீராமபத்ரன் ஶபரியின் ஆச்ரமத்தை யடைந்தான். ஸர்வேச்வரனே ஸ்ரீ ராமபத்ரரூபியாக அவதரித்துத் தன்னிருப்பிடம் தேடி வருகிறான் என்பதை யறிந்து மிகுந்த மகிழ்ச்சி கொண்ட ஶபரீ அப்பரமனை அடிவணங்கிப் பல கனிவகைகளை யளித்து உபசரித்தாள். ஸ்ரீ ராமபத்ரனும் ஶபரீ செய்த உபசாரத்தினால் தனக்குண்டான பரமஸந்தோஷத்தை வெளியிட்டு அவள் கேட்டுக்கொண்டபடி தேஹத்யாகம் செய்து வைகுந்தம் செல்ல அநுமதி கொடுத்தார். மான்தோலுடுத்தி ஜடைதரித்து வந்த பெருங்கிழவியான ஶபரியும் விதிப்படி மூட்டிய நெருப்பில் தன்னுடலை ஹோமம் செய்து திவ்யதேஹம் பெற்று ஸ்ரீவைகுண்ட லோகம் சென்றாள். இப்படி ஸ்ரீ ராமபத்ரன் ஶபரியின் மோக்ஷப்ராப்தியை நேரில் கண்டு

அநுபவித்ததால் 'ஶபரீமோக்ஷஸாக்ஷிபூத' என்று கூறப்பட்டான். மோக்ஷத்தை யளிப்பது ஸர்வேச்வரனுன எம்பெருமானுடைய அஸாதாரணகுணமாக இருக்க, அதைக்கூருமல் ஸாக்ஷியாயிருத்தல் என்ற ஸாதாரணகுணத்தைக் கூறியது எக்காரணம் பற்றி எனில், ராவணஸம்ஹாரம் நடக்கும் வரையில் ஸ்ரீ ராமபத்ரன் தன்னை மநுஷ்யபாவனையோடு நிர்தேசிக்க ஸங்கல்பித்துக்கொண்டதை யநுஸரித்து நம் ஸ்வாமி இங்கு 'ஸாக்ஷிபூத' என்று ஸாதித்தருளினர். ஶபரிக்கு ஸ்ரீ ராமபத்ரனே மோக்ஷமளித்தான் என்பதை ஶபரியின் வாக்கைக்கொண்டே யுணரலாம். அது வருமாறு:- 'சக்ஷுஷா தவ ஸௌம்யேந பூதாஸ்மி ரகுநந்தந! கமிஷ்யாம்யக்ஷயாங் லோகாந் த்வத்ப்ரஸாதா தரிந்தம!' என்று. இதன்பொருள்:— சக்ரவர்த்தித் திருமகனுயவதரித்த பரமபுருஷ! தேவரீருடைய அழகிய திருக்கண் பட்ட மாத்திரத்தில் நான் ஸர்வபாபமும் நீங்கப்பெற்றேன். எதிரிகளை அடக்கும் குணமுள்ளவனே! இனி யான் உமது அருளால் சாச்வதமான வைகுந்தலோகம் செல்வேன் என்று.

ஆரண்யகாண்டக் கதைச்சுருக்கம் முற்றும்.

प्रभञ्जनतनयभावुकभाषितरञ्जितहृदय!

ப்ரபஞ்ஜநதநயபாவுகபாஷிதரஞ்ஜிதஹ்ருதய!

ப்ரபஞ்ஜநதநய— வாயுபுத்ரனுன ஹநுமானுடைய, பாவுக— க்ஷேமத்தை யளிக்கும், பாஷித— வார்த்தைகளால், ரஞ்ஜித— ஸந்தோஷமடைந்த, ஹ்ருதய— மனமுள்ள ஸ்ரீ ராமபத்ர! இங்கு அறியவேண்டிய ஸ்ரீ ராமாயண கதைச்சுருக்கம் வருமாறு:— மைதிலியைத் தேடிவர ஸுக்ரீவன் பெருந்துணை புரிவான்; ஆகையால் அவனிடம் சீக்கிரம் செல்வீர் எனத் தன்னிடம்கபந்தன் சொல்லியதையடுத்து ஸ்ரீராமபத்ரன்ஸுக்ரீவனுடன் தோழமை கொள்வதற்காக இளைய பெருமாளுடன் பம்பாஸரஸ்ஸின் கரைக்கு வேகமாகச் செல்கின்ருன். பம்பைக்குச் சமீபமுள்ள ருஶ்யமூகமலையின் உச்சியிலிருக்கும் ஸுக்ரீவன் ஸ்ரீ ராமபத்ரனும் லக்ஷ்மணனும் வருவதைக் கண்டதும் பெருந்திகில் கொள்கிருன். தனக்கு விரோதியான வாலி தன்னை யடிக்கக்கருதி இவ்வொற்றர்களை யனுப்பியிருப்பானே? என்ற சங்கையே இதற்குக் காரணமாகும். காட்டிலே வஸித்துவரும் மயில் நீருண்ட மேகத்தைக் கண்டாலும் அது தன் தோகையைப் பொசுக்கவல்ல காட்டுத்தீயின் புகைப்படலமோ என அஞ்சுவது இயற்கையன்றோ! உடனே ஸுக்ரீவன் தன் அருமை மந்திரியான வாயுகுமாரனை உண்மையறிந்து வரும்படி அனுப்புகின்ருன். வாயுபுத்ரனுன ஹநுமானும் ஸந்யாஸிபுருவத்துடன் ஸ்ரீ ராமபத்ரனிடம் வருகின்ருன் என்று.

(க—ரை) ஹநுமான் செவிக்கினிய சொற்களைக் கூறுகின்ருன்; இவற்றைச் செவிமடுத்த ஸ்ரீ ராமபத்ரனும் பரமாநந்தமடைகின்ருன் என்று.

இங்கு ஹநுமான் சொல்லிய மதுரமான வாக்கியங்கள், 'ராஜர்ஷிதேவப்ரதிமௌ' என்று தொடங்கி 'ருஶ்யமூகாதிஹ ப்ராப்தம் காமகம் காமரூபிணம்' என்று முடியும் ஸ்ரீ ராமாயண கிஷ்கிந்தாகாண்டபாகத்தில் ப்ரகாசிக்கின்றன. ஸ்ரீ ராமலக்ஷ்மணர்களின் திருமேனி அழகையும் வில்லழகையும் ஆயுதம் தரிக்குமழகையும் விசேஷமாக வர்ணிக்கும் ஹநுமான் 'ராஜ்யநிர்வாஹமேற்கத்தக்க ஆற்றல் கொண்ட தாங்களிருவரும் முநிவேடம் பூண்டவர்

களாய் எப்படி இவ்விடம் வர இயன்றது? ஆபரணங்களுக்கும் அழகு கொடுக்கவல்ல அழகிய தங்கள் புஜங்களுக்கு ஆப்ரணமிடாத காரணம் யாதோ? என்றிப்படி பக்திபரவசத்தினால் மதுரமாகப் பேசுகின்றான். மேலும், ஸுக்ரீவன் என்ற ஓர் வானரராஜன் தன் அண்ணனால் வஞ்சிக்கப்பட்டுத் துயர்கொண்டு உலகமெலாம் திரிகின்றான். தர்மாத்மாவும் மஹாமதியுமான அவன் என்னைத் தங்களிடம் அனுப்பியுள்ளான். வாயுபுத்ரனான நான் அவனுடைய மந்திரிவர்க்கத்தைச் சேர்ந்தவன். ஹநுமான் என்பது என் பெயர். எங்கள் தலைவனாகிய ஸுக்ரீவன் தங்களிடம் நட்பு கொள்ள விரும்புகின்றான். அத்தோழமையை உண்டாக்குவதற்காகவே, நினைத்தபடி உருவெடுக்க வல்லவனான யான் ஸந்நியாசி ரூபம் தாங்கி ருசியமூக மலையிலிருந்து இங்கு வந்துள்ளேன்' என்று கூறி முடிக்கின்றார் என்பதே இவ் வாக்கியங்களின் கருத்து. இச்சொற்கள் ஸ்ரீ ராமபத்ரனை மகிழ்வித்தன என்பதை 'இலக்கணத்துக்குப் பொருந்தியதாய் எழுத்துக்களின் தெளிவு பெற்றதாய், வேகமாகவோ தாமதமாகவோ சொல்லப்படாததாய், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் நற்சொல்லை இந்த ஹநுமான் பேசுகின்றான்' என்று ஸ்ரீ ராமபத்ரன் கூறும் 'ஸம்ஸ்காரக்ரமஸம்பந்நாம் அத்ருதாம் அவிலம்பிதாம் உச்சாரயதி கல்யாணீம் வாசம் ஹ்ருதயஹாரிணீம்' என்ற ச்லோகத்தினால் அறியலாம். இங்கு பாவுக என்ற பதத்திற்கு 'தியானிப்பவன்' என்ற பொருள் கொண்டு ஹநுமான் என்ற பக்தனின் சொற்களால் மகிழ்ச்சி கொண்ட ஸ்ரீ ராமபத்ரன் என்றும் பொருள் கூறலாம். பகவானிடம் ஸர்வதா மனம் செலுத்தும் ஆழ்வார்களை பாவுகர்கள் என்று தசாவதார ஸ்தோத்ரத்தில் பாவுகை: என்ற பதத்தினால் குறிப்பிட்ட நம் ஸ்வாமியே இங்கு 'ப்ரபஞ்ஜநதநயபாவுக' என்று ஹநுமானைக் கூறுவதின் ஸ்வாரஸ்ய மநுபவிக்கத்தக்கது. புன்னகை தோன்ற இனிமையாகப் பேசுமியல்பினன் (ஸ்மிதபூர்வாபிபாஷீ) என்றும் மேன்மேலும் யுக்தியுடன் பேசுவதில் ப்ருஹஸ்பதிக்கு நிகரானவன் (உத்தரோத்தரயுக்தௌ ச வக்தா வாசஸ்பதிர் யதா) என்றும் ஸ்ரீ ராமாயணத்தில் புகழப்படும் ஸ்ரீ ராமபத்ரனே ஹநுமானின் சொற்களைக் கேட்டு மகிழ்ந்தான் எனில், அச்சொற்கள் மிக்க அர்த்தபுஷ்டியும் இனிமையும் பெற்றவை என்பது கூறாமலே விளங்கும்.

तरणिसुतशरणागतिपरतन्त्रीकृतस्वातन्त्र्य!

தரணிஸுதஶரணாகதிபரதந்த்ரீக்ருதஸ்வாதந்த்ர்ய!

தரணிஸுத- ஸூர்யபுத்ரனான ஸுக்ரீவனை, ஶரணாகதி- ஶரணமாக அடைந்ததால், பரதந்த்ரீக்ருத- பராதீநமாகச் செய்யப்பட்ட, இழக்கப்பட்ட என்றபடி. ஸ்வாதந்த்ர்ய- தனது சுதந்திரத்தன்மையை உடைய ஸ்ரீ ராமபத்ர! இங்கு அறியவேண்டிய ஸ்ரீ ராமாயணக்கதை பின் வருமாறு:- சிறிய திருவடியான ஹநுமான் சொல்லிய இனிய சொற்களால் மகிழ்ந்த ஸ்ரீ ராமபத்ரன், 'லக்ஷ்மணா! நாம் எந்த ஸுக்ரீவனிடம் நட்பு கொள்ள விரும்பி இங்கு வந்தோமோ, அந்த ஸுக்ரீவனின் மந்திரியென்று கூறி இவ்வானரவீரனே இங்கு நம்மிடம் வந்திருப்பதால் அவனுடன் ஸம்பாஷணை செய்து நமது இஷ்டத்தை ஸாதிப்பாயாக' என்று இளையபெருமாளுக்குக் கட்டளையிடுகிறான். உடனே லக்ஷ்மணனும் 'ஹநுமன்! வானரராஜனும் மஹாத்மாவுமான அந்த ஸுக்ரீவனின் நற்குணங்களை யறிந்தே

நாங்கள் அவரைத் தேடி இங்கே வந்துள்ளோம். ஸுக்ரீவன் உமக்குக் கட்டளையிட்டதாகக் கூறும் உமது வாக்கியத்தை யநுஸரித்து நாமும் ஸுக்ரீவனோடு நட்பு கொள்ள விரும்புகின்றோம்' என்று ஹநுமானிடம் ஸ்ரீ ராமபத்ரனின் திருவுள்ளத்தைத் தெரிவிக்கின்றான். இதைக் கேட்டதும் ஹநுமான் ராமனால் ஸுக்ரீவனுக்கும், ஸுக்ரீவனால் ராமனுக்குமாக ஸாதிக்கவேண்டிய கார்யமிருப்பதை எண்ணிப் பரமஸந்தோஷம் கொள்கின்றான். பிறகு பயங்கரமான பம்பைக்காட்டிற்குத் தம்பியுடன் வந்த காரணம் யாதோ என ஸ்ரீ ராமபத்ரனைப் பார்த்து வினவுகின்றான். இதற்கு பதிலளிக்கும்படி ஸ்ரீ ராமபத்ரன் லக்ஷ்மணனுக்குக் கட்டளையிடுகிறான். உடனே லக்ஷ்மணன் கீழ் வருமாறு பதிலளிக்கின்றான். 'தருமத்தில் பேரன்பூண்ட தசரதன் என்ற அழகிய ராஜா நான்கு வர்ணங்களையும் ரக்ஷித்து வந்தான். பல யாகங்கள் புரிந்த அவ்வரசனின் மூத்தபுதல்வனாகிய இவரை ராமன் என்று ஜநங்களழைப்பார்கள். ஸர்வபூதங்களுக்கும் ரக்ஷகனான இவர் தமப்பன் கட்டளைப்படி நடப்பவர். வீரகுணமும் ராஜலக்ஷணங்களும் நிரம்பிய இவர் ஒரு காரணத்தினால் ராஜ்யத்தைத் துறந்து காட்டில் வாஸம் செய்ய என்னுடன் வந்து விட்டார். உதயகாலத்தில் தொடர்ந்து வந்த ப்ரபை அஸ்தமயகாலத்திலும் ஸூரியனைப் பிரியாதிருப்பதுபோல இவரது மனைவியாரான ஸீதைப்பிராட்டியும் நாட்டிலே போலக் காட்டிலும் இவரை விடாமல் தொடர்ந்து வந்து விட்டாள். இவரது சீரிய குணங்களைக் கண்டு இவரிடம் அடிமைகொண்ட நான் இவரது தம்பி முறைப்பட்டவன். என்னை லக்ஷ்மணன் என்றழைப்பார்கள். இவர் சிறிய நன்றியையும் அதிகமாக மதிப்பார். ஸர்வபூதங்களின் இதத்தையே விரும்புமிவருடைய மனைவியை நாங்களில்லாதபோது யாரோ ஒரு அரக்கன் அபஹரித்துச் சென்று விட்டான். ஆனால் அவ்வரக்கன் யாரெனத் தெரியவில்லை. கபந்தன் என்பவன் 'வானரராஜனான ஸுக்ரீவனே ஸீதாபஹாரம் செய்த ராக்ஷஸனையறிந்து சொல்வதில் ஸமர்த்தன்' எனக் கூறி ஸ்வர்க்கம் சென்று விட்டான். அவ்வார்த்தையை யநுஸரித்து நானும் ஸ்ரீ ராமனும் ஸுக்ரீவனைச் சரணமடைகின்றோம். செல்வங்களைப் பிறருக்கு ஈந்தும் தானமடைந்தும் உயர்ந்த கீர்த்திபெற்ற இவ்வுலகரக்ஷகன் இன்று ஸுக்ரீவராஜாவை சரணமாக வரிக்கின்றார். எவருடைய அநுக்ரஹத்தினால் எல்லா ஜநங்களும் ஸுகமடைகின்றனரோ, அப்படிப்பட்ட இவர் இன்று வானரராஜனின் தயவை விரும்புகின்றார்' என்றிவ்வாறு பல பேசி ஸுக்ரீவனைச் சரணமடைவதில் ஸ்ரீ ராமபத்ரனுக்கு உள்ள தீவ்ரமான ஆர்வத்தை வெளியிடுகிறான். இப்படி சோகத்துடன் கண்ணீர்மல்கிக் கூறும் லக்ஷ்மணனைப் பார்த்து ஹநுமான் கூறுகிறான்- எங்கள் தலைவனான ஸுக்ரீவராஜாவும் இப்படிப்பட்ட புத்திஸாமர்த்தியமும் புலனடக்கமும் கொண்ட மஹான்களையே காண விரும்புகின்றார். நல்ல வேளையாக இன்று தங்கள் தர்சநம் கிடைத்தது. எங்கள் ராஜாவும் தன் அண்ணனுடன் பகைகொண்டதால் ராஜ்யத்தை யிழந்துவிட்டார். அவர் மனைவியை வாலியென்னும் அவர் அண்ணன் அபஹரித்துவிட்டான். ஸூரியபுத்திரனான அவர் எங்களுடன் சேர்ந்து ஸீதையைத் தேடுவதில் உங்களுக்கு உதவி செய்வார். ஆகையால் நாம் மூவரும் ஸுக்ரீவனிடம் செல்வோம் என்று. இதைக்கேட்ட லக்ஷ்மணன் ஸ்ரீ ராமபத்ரனிடம் சென்று கீழ்க்கண்டவாறு விண்ணப்பிக்கிறான். முகப்பொலிவுடனும் மகிழ்ச்சியுடனும் பேசும் இம்மாருதி பொய் சொல்லமாட்டானெனத் தோன்றுகின்றது என்று.

(தொடரும்)

ஸ்ரீ:

பெரியோர்கள் பக்கலில் 1

ஸம்ஸ்கிருதம் வழக்கொழிந்த பாஷை. எக்காலத்திலும், யாவரும் அதை பேச்சு வழக்கில் உபயோகித்தது கிடையாது, என்று பலரும் கூறுகின்றனர். அது ஸரியல்ல என்பது பெரியோர்களின் கருத்து. அதை விவரிக்க இங்கு நாம் முயல்கிறோமல்லோம். ஆயினும் மேல்கண்ட தலைப்புக்குச்சேர இவ்விஷயத்தில் ஒன்று மட்டும் கூறி மேல் செல்லக்கடவோம். 'தைத்திரீயம்' என்னும் ஓர் உபநிஷத்தில் குருகுலவாஸம் முடிந்து, கல்விகள் எல்லாம் கற்று கைவரப்பெற்று வீடு திரும்பும் வித்யார்த்திகளுக்கு, குரு அறிவுரை நிகழ்த்துகிறார். இக்காலத்தில் சர்வகலாசாலைகளில் தேறின மாணவர்களுக்கு பட்டமளிப்புவிழாவில் ப்ரசங்கம் செய்வதுபோல் 'ஸத்யம் வத' 'தர்மம் சர' என்பவைபோன்ற ப்ரஸித்தமான அவச்யமான பல உபதேசங்கள் அங்கு காணப்படுகின்றன. அவ்வித உபதேசங்களில் இதுவும் ஒன்று. 'தேஷாம் த்வயா ஆஸநே ந ப்ரச்வஸிதவ்யம்', பெரியோர்கள் பக்கலில்பணிவுடன் நடந்து கொள்க' என்பதே அவ்வாக்யத்தின் கருத்தாயினும் அக்கருத்தை அவ்வாக்யம் வெளியிடும் அழகு அநுபவிக்கத்தக்கது. பேச்சுவழக்கிலெந்நாளுமிருந்திராத ஓர்பாஷை இவ்விதத்தில் உலகத்தவர் பேச்சு நடையை ஒட்டிய முறையில் 'பெரியோர்கள் முன்னிலையில் மூச்சும் விடாதே' என்று கூறக் கூடுமா? பெரும்பாலும் உணர்ச்சியற்ற நூல் வசன நடைக்கும் விஷமம் செய்யும் தனது மகனை மிரட்டும் தகப்பனின் 'பேசாதே, மூச்சு விடாதே' என்ற உணர்ச்சி மிகுந்த சொல் போன்ற சொல் நடைக்கும் எத்துணை வித்யாஸம். இவ்விதம் கம்பீரமாயும் இயற்கையாகவும் பதப்ரயோகம் செய்து வேதங்களும் மற்ற ஸம்ஸ்க்ருத நூல்களும் நமது மனத்தைக்கவருகின்றன.

இவ்வளவால் இவ்வாக்யம், 'தேஷாம் த்வயா ஆஸநே' என்பதற்குமேல் 'ந ப்ரச்வஸிதவ்யம்' என்று பதங்களைச் சேர்த்துப் பொருள் கொள்ளப்பட்டது. அவர்கள் பக்கலில் 'மூச்சுகூட விடாதே' என்று சொல்லி 'அவ்வளவு ஜாக்ரதையுடன் பணிந்து நடக்கவும்' என்று நம்மை எச்சரித்ததாக ஆகும். இந்த வாக்யத்திற்கு மற்றொரு விதமாகவும் பொருள் கூறுவர். 'தேஷாம் த்வயா ஆஸநேந ப்ரச்வஸிதவ்யம்' என்று பிரித்து 'ஆஸநேந' என்பதை மூன்றும் வேற்றுமைப் பொருளில்கொண்டு 'அவர்களுக்கு ஆஸநமிடுவதினால் நீ மூச்சை (ப்ராணனைப்) பெறுவாய் என்றும் வ்யாக்யானம் செய்யலாகும். பெரியோர்கள் நீ இருக்கும் இடம் தேடிவந்தால் அவர்களுக்குக் கால் அலம்ப ஜலம் கொடுத்து ஆஸநமிட்டு உன் ப்ராணனை மீண்டும் பெற்றுக்கொள்' என்று உபதேசிக்கிறது உபநிஷதம்.

இங்கு ஒரு ஸந்தேஹம் உண்டாகும். வந்தவருக்கு இவன் அவ்விதம் செய்யாவிடில் இவன் உயிர் போய்விடுமா? வந்தவர் இவனை உயிர் நீங்கச் செய்யுமளவிற்குக் கொடியவரா? அப்பொழுது இவர்களுக்குள் கலஹம் ஏதாகிலும் நிகழுமா? என்றெல்லாம் கேட்கலாம். அதொன்றும் அன்று. இங்கு ஒரு சாஸ்த்ரார்த்தரஹஸ்யம் அடங்கிக்கிடக்கிறது. சிறியோர்கள் இருக்கும் இடந்தேடி பெரியோர்கள் வர நேர்ந்தால், சிறியோர்கள் ப்ராணன் சரீரத்தை விட்டு வெளியேறத் தயாராகின்றது. அதனால் அவர்கள் பெரியோரைக் கண்டவுடன் இருக்கையை விட்டெழுந்து, எதிர்கொண்டு வரவேற்று, உபசரிக்கவேணும். அது செய்வதால் சிறியவர்கள் மீண்டும் ப்ராணனைப் பெற்றவர் ஆகின்றனர். இவ்விதம் ஒரு ரிஷி வசநம் காண்கிறது. 'ஊர்த்வம் ப்ராணா: ஹி உத்க்ராமந்தி யூந: ஸ்தவிரே ஆகதே । ப்ரத்யுத்தான அபிவாதாப்யாம் புந: தாந்ப்ரதிபத்யதே'॥ ஆகையால்தான் இந்த உபநிஷத்வாக்யம் 'அவர்களுக்கு ஆஸநமிட்டு உன் ப்ராணனைக் காப்பாற்றிக்கொள்' என்று நமக்குக் கட்டளை இடுகிறது.

இது என்ன அநீதி? நாம் செய்யாத குற்றத்திற்கு நமக்கு தண்டனையா? பெரியோர்கள் சிறியவர் இருப்பிடம் தேடிவருவது சிறியவர் செய்த குற்றமல்லவே? அவ்விதமிருக்க பெரியவர்கள் வர நேர்ந்தால் சிறியவர்களின் ப்ராணன் வெளிக்கிளம்ப என்ன காரணமுண்டு? என்று நாம் மேலும் ஸம்சயம் கொள்ளுகிறோம் இங்கு. ஆனால் இதை நாம் நன்கு ஆலோசித்தோமானால் ஸமாதானமும் கிடைத்துவிடும்.

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் தண்டகாரண்யத்தில் புகுந்து ஸஞ்சரித்துக்கொண்டிருக்கும்போது, அங்கு நெடுநாட்களாய் வஸித்து ராக்ஷஸர்களின் ஹிம்ஸைக்கு இலக்காகி கொடுந்துயரம் அடைந்த ரிஷிகள் அனைவரும் திரண்டு பெருமாளைக் காணவருகின்றனர். தாங்கள் கனவிலும் கண்டறியாத பெருமாள் திருக்கோலத்தை நேரில் காண நேர்ந்தபோது பெருவியப்பெய்தி மெய்மறந்து நிற்கின்றனர். பிறந்ததிலிருந்து நாகரிகவாஸனையே அறியாதவர்கள் இவர்கள். பரமநாகரிகர்களாய், பதினாயிரம் ஆண்டு தவங்கிடந்த சக்ரவர்த்தியின் ஆசை திருக்குமாரர்களாய் எதிரில் நிற்கும் பெருமாள் இளையபெருமாள் இவர்களுடையவும் ஜநக நந்தினியினுடையவும் எழிலுருவம் அதில் அவர்கள் வஸ்திரம் ஆபரணம் இதுகள் சாத்தியிருக்கும்விதம் மேன்மை மென்மை இவைகள் ஒவ்வொன்றும் மஹர்ஷிகளுக்குப்பார்க்கப்பார்க்கத் தெவிட்டாதவையாய் இருந்தன. பிறகு அவர்கள் அவ்வித அநுபவத்திலிருந்து தங்களை ஒருவாறு மீட்டுக்கொண்டு வந்த கார்யத்தை நினைத்துக்கொண்டு பெருமாளுக்கு ராவணன் தின்று மிகுந்த தங்கள் சரீரங்களையும்கொன்று குவித்த எலும்புக் கூடுகளையும் காட்டி அபயம் வேண்டி நின்றனர். பெருமாளும் அவர்கள் துயரம் கண்டு மனமிரங்கி அவர்கள் இழவுக்கு நாம் முற்பாடாக உதவப்பெற்றிலோமே. நமதிடம் தேடி அவர்கள் வரநேர்ந்ததே. என்று மிகவும் குறையாளராய் ஒருச்லோகம் விண்ணப்பிக்கும்படி இருந்தது. ‘ப்ரஸீதந்து பவந்தோ வை ஹ்ரீ: ஏஷா ஹி மமாதுலா । யத் ஈத்ருசை: அஹம் விப்ரை: உபஸ்தேயைருபஸ்தித:॥’ நீங்கள் என்னை க்ஷமித்தருளவேணும். நான் செய்த முறைகேட்டிற்கு மிகவும் வெட்கி எனக்குதண்டனையை நானே அறிந்துக்கொண்டேன். உங்களுக்கு ஆட்செய்யப்பிறந்த நான் உங்களிலும் முற்பட்டு உங்களைக்கிட்டி குறைகளை விசாரிக்கவேண்டியிருக்க என் குடியிருப்பைத் தேடி நீங்கள் வரலாவதே என்று மஹரிஷிகளின் ஸமீபம் பெருமாள் ப்ரார்த்தித்தார்.

இதனால் பெரியோர்கள் நம்மிடம் தேடி குறையாளராக வரும்படி நாம் அவர்கள் பக்கல் உதாஸீனர்களாக இருக்கக்கூடாது. நாமே முந்தி சென்று அவர்களை விசாரிப்பது நமது கடமை. இது தவிறுவது நமது குற்றமே. இக்குற்றத்தை பொறுப்பிக்கவே ஆஸநாதி உபசாரங்கள் செய்து நமது உயிரை மீட்டுக்கொள்ளுகிறோம் என்ற உயர்ந்த சாஸ்த்ரார்த்தம் வெளியிடப்பட்டது.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

15–10–56 ஏகாதசியன்று மத்யாஹ்னம் கண்டியிலிருந்து புறப்பட்டு 11- மைல் தூரமுள்ள ஸதாசிவப்பேட்டைக்கு எழுந்தருளியாயிற்று. 16-10-56 ஸதாசிவப்பேட்டையில் துவாதசி ஆராதனமும், ததீயாராதனமும் நடந்தன. ஹைதராபாத்திலிருந்து ஸ்ரீ ஆராவமுதய்யங்கார், ஸ்ரீ ஸ்ரீநிவாஸய்யங்கார், ஸ்ரீ ராமஸ்வாமிஐயங்கார் முதலியவர்கள் வந்து பெருமாளை ஸேவித்தார்கள். இனிமேல் பெருமாளைத் தொடர்ந்து வந்து அடிக்கடி ஸேவிக்க முடியாதென்றும், துவாதசி ஸ்ரீபாததீர்த்தம் கிடைத்தது விசேஷமென்றும் விஜ்ஞாபித்துக் கொண்டார்கள்.

அவ்வூரிலுள்ள எல்லா ஜனங்களும் மிகக் குதூஹலத்துடன் திரண்டுவந்து பெருமாளை ஸேவித்ததுடன் ராத்திரி பெருமாள் ஆராதனத்தையும், டோலோத்ஸவத்தையும் நடத்தி வைத்தார்கள். ராத்திரி அந்த ஊரை விட்டு எழுந்தருளும்போது அவ்வூர் வீதிவழியாக எழுந்தருளப் பிரார்த்தித்து வாத்யம் விளக்குகளுடன் வீதியில் எழுந்தருளப்பண்ணி ஒவ்வொரு க்ருஹத்திலும் பஞ்சாலத்தி எடுத்து உபஹாரம் ஸமர்ப்பித்து ஊர் எல்லை தாண்டும் வரை திரளாக வந்து அனுப்பிவைத்தார்கள்.

அங்கிருந்து $11\frac{1}{2}$- மைல் தூரமுள்ள காமக்கல்லுக்கு எழுந்தருளினர். 17–10–56 ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 12- மைல் தூரமுள்ள ஜஹீராபாத் எழுந்தருளினர். அங்கிருந்து 18–10–56 ராத்திரி புறப்பட்டு 8மைலி லுள்ள ராக்பள்ளிக்கு எழுந்தருளினர். அங்கிருந்து 19–10–56 ராத்திரி 12- மணிக்குப் புறப்பட்டு 12- மைல் உள்ள மங்கல்கி எழுந்தருளினர். போகிகளின் ப்ரார்த்தனையின் பேரில் 21–10–56 வரையில் அங்கே எழுந்தருளியிருந்தார். 21–10–56 ராத்திரி புறப்பட்டு 12- மைல் தூரமுள்ள உம்னபாத் எழுந்தருளினர். 22–10–56 ராத்திரி புறப்பட்டு 15-மைல் தூரமுள்ள துாாரி எழுந்தருளினர். வண்டிகள் வர தாமதப்பட்டபடியால் விச்வரூபம் கொஞ்சம் நாழிகை கழித்து நடந்தது. அன்று ராத்திரி புறப்பட்டு 14- மைல் தூரமுள்ள டாலிம்பு எழுந்தருளினர். 25–10–56 அன்று ராத்திரி புறப்பட்டு 17- மைல் தூரமுள்ள நல்துர்க் என்கிற நளதுர்க்கத்திற்கு எழுந்தருளினர். நல்துர்க்கத்தில் மலைமேல் கொஞ்சம் உயரமான இடத்தில் பெருமாள் எழுந்தருளியிருந்தார். மலையடியில் பூர்ணை என்னும் நதி ஓடிக்கொண்டிருந்தது. வேறு ஜலஸௌகர்யம் கிடையாது. அவ்விடத்திற்கு ஷோலாப்பூரிலிருந்து ஸ்ரீமான் ஜெய்நாராயணன் முதலிய ஸேட்கள் வந்து ராத்திரி பானகாராதனத்தின்போது ஸேவித்துவிட்டு அவசியம் ஷோலாப்பூருக்கு எழுந்தருளவேண்டும் என்றுபிரார்த்தித்தார்கள். கருங்கல் கப்பிரோடாகையால் ச்ரமபரிஹாரத்திற்காக ஒரு நாள் எழுந்தருளியிருக்கவேண்டுமென்ற போகிகளின் பிரார்த்தனையின்பேரில் அங்கு தங்கிவிட்டு 27–10–56 ராத்திரி அங்கிருந்து புறப்பட்டு 12- மைல் தூரமுள்ள காணப்பூர் எழுந்தருளினர். அன்றும் ஸோலாப்பூரிலிருந்து ஸ்ரீமான் ராஜகோபால் ஸோமானி முதலிய தென்கலைஸேட்டுகளும் வந்து ஸோலாப்பூருக்கெழுந்தருளவேண்டும் என்று ப்ரார்த்தித்தார்கள். 28–10–56 ராத்திரி புறப்பட்டு 15-மைல் தூரமுள்ள ஸோலாப்பூருக்கு எழுந்தருளினர். ஸோலாப்பூரில் மாஹேச்வரீ பஞ்சாயதீ பவனம் என்ற விஸ்தாரமான கட்டிடத்தில் எழுந்தருளப்பண்ணினர்கள். அங்கு 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் வர்ஷாராதனத்தை உத்தேசித்து திவ்யப்ரபந்த வேத பாராயணங்கள் தொடங்கப்பட்டது. அன்று ஸாயங்காலம் ஸோலாப்பூர்வாஸிகளின்ப்ரார்த்தனையின்பேரில் தங்கப்பல்லக்கில் பெருமாளுடன் தந்தப்பல்லக்கில் ஊர்வலமாக எழுந்தருளியாயிற்று. பாண்டு முதலிய விசேஷ வாத்யங்களுடன் ஸ்தோத்ரரத்னம் முதலியஅவர்களுக்குத் தெரிந்த ஸ்தோத்ரபாடங்களுடன்

உத்ஸாஹத்துடன்வீதிகளில்எழுந்தருளப்பண்ணினர்கள். அன்றுமுதல் பெருமாளை எல்லா ஸேட்டுகளும் சேர்ந்து ஆராதித்தார்கள். 31ந் தேதி புதன் கிழமை பிரதோஷ ஆராதனமும் டோலையும் நடந்தது. அன்று முழு ஆராதனத்தையும் ஸ்ரீமான் ராஜகோபால சோமானி தன்மார்பத்தில் நடத்திவைத்தார். பின்மாலை தீபாவளி திருமஞ்சனஆராதனம் யதாக்ரமம் நடந்தது.

அவ்வூரில் கொஞ்சகாலமாக கலாபேதப்ரயுக்தமாக லக்ஷ்மீநாராயணன் கோயிலில் விவாதம் ஏற்பட்டு கோர்டில் வியவஹாரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. மேற்படி லக்ஷ்மீநாராயணன் கோயிலில் உத்தரதேச ஸம்ப்ரதாயப்படி அவ்விடத்து ப்ராஹ்மணர்கள் ஆராதனம் செய்துவருகிறார்கள். 'அந்தக் கோயிலுக்கு ஸ்ரீ அழகியசிங்கர் (எழுந்தருள) விஜயம் செய்யவேண்டுமென்றும் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளி கடாக்ஷித்தமாத்திரத்தாலேயே அந்தக்கோயிலுக்கு அபிவ்ருத்தி ஏற்படும் என்றும் அதிலிருந்து பழையபடியே இரு கலையாருக்கும் ஒற்றுமை நேரு' மென்றும் ப்ரார்த்தித்தார்கள். தாம் அங்கு வந்து தீர்த்தாதிகள் ஸ்வீகரிக்கும்படியான ஸௌகர்யம் இல்லை என்றும் ஸாதிக்கும்படி இருந்தது. அவ்வூரிலுள்ள வடகலையாரில் சிலர் 'கோர்ட்டில் கோயில் ஸம்பந்தமான வியவஹாரம் இருக்கும் போது ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளுவதை தத்காலம் கோயில் நிர்வாஹத்தை நடத்திவரும் தென்கலையார்கள் தங்களுடைய ஆசாரத்திற்கு (அதைத்தான் வடகலையார்கள் பலமாக ஆக்ஷேபிக்கிறார்களாம்) ஸாதனமாக கோர்டில் உபயோகிப்பார்கள் என்று தாங்கள் சங்கிப்பதாகவும் ஆகையால் எழுந்தருளத் திருவுள்ளம் பற்றுவது நல்ல' தென்று தங்களுக்குப் பட்டதாகவும் விஜ்ஞாபித்தார்கள். இதுவிஷயம் தென்கலையாருக்கும் மற்றும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் தெரிந்தவுடன் 'வடகலையார்களில் சிலர் அம்மாதிரி சங்கிக்கவேண்டா மென்றும் ஸ்ரீ அழகியசிங்கர் திருவடியில் சபதம் செய்கிறோம். எங்கள் கோர்ட்டு வியவஹாரத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் அந்தக் கோயிலுக்கு எழுந்தருளுவதை எவ்விதத்திலும் ஸாதகமாக ஸம்பந்தப்படுத்துவதில்லை என்றும் இவ்விடங்கட்கிப்படிப்பட்ட பெரிய மஹான்களான ஸ்ரீ அஹோபிலமடாதிபதிகள் எப்பொழுது எழுந்தருளினர்கள் என்று தெரியாதென்றும் அநேகமாக எழுந்தருளவில்லை என்றே சொல்லலாமென்றும் இப்பொழுது இவ்வூருக்கு அரியதாக நேர்ந்திருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் விஜயத்தை தங்களுக்கு இழந்துவிட மனதில்லையென்றும் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளப்படியே ஸ்ரீ அழகியசிங்கர் கோயிலுக்கு எழுந்தருளி கடாக்ஷித்துவிட்டு எழுந்தருளினல் போதும் என்றும் அவசியம் எழுந்தருளவேண்டும் என்றும் ப்ரார்த்தித்தார்கள். இதுவிஷயமாக இரண்டு நாளாகவே அடிக்கடி வந்து ப்ரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் சபதபூர்வமாக ரொம்பவும் நிர்ப்பந்தித்ததுடன் விசேஷ வாத்யகோஷத்துடன் திரளாக காத்துக்கொண்டிருந்ததின்பேரில் 1-11-56 வியாழக்கிழமை 5-மணிக்குப் புறப்பட்டு அந்த கோயிலுக்கு எழுந்தருளினர். (அந்தக் கோயில் நிலைமையையும் கடாக்ஷித்துவிட்டு)6-மணிக்கு வீதிகள் வழியாகத் திரும்பி எழுந்தருளிபாயிற்று.

தென்தேசம் மாதிரியாக கலாப்ரயுக்தமான சண்டையை ஒருவருக்குத்தான் உரிமை என்கிற ரீதியில் கோர்ட்டுகளில் வளர்த்திக்கொண்டு மேன்மேலும் வைமனஸ்யங்களையும் பகவத் பாகவதாசார்யாபசாரங்களையும் விளைவித்துக் கொள்ளாமல் முன் இந்த ஊரில் இருந்தமாதிரியோ, அல்லது இப்பொழுது ஐகாஸ்யத்தை உத்தேசித்தோ ஒற்றுமையான ரீதியில் அவரவர்களுடைய ஸம்ப்ரதாயத்தையும் தத்தம் ஆசார்யர்களையும் கொண்டாடுகிறதுதான் நன்று இருக்குமென்றும் இதை நீங்களே பரந்த மனஸ்ஸுடன் விசாரித்து முடிவு செய்து கொள்ள முடியுமென்றும் மற்ற வெளியூரில் உள்ளவர்களுடைய ஒத்தாசையை நாடினல் அவரவர்களுடைய ஸம்ப்ரதாயத்தினுடையவும் அபிப்ராயத்தினுடையவும் நிலைமைக்குத் தக்கபடிசொல்லக்கூடுமாதலால்கலஹம்வளர்ந்து கொண்டுவருமென்றும் அதனல் ஸாமரஸ்யம் ஏற்படாததுடன் கோர்ட்டில் எந்த கக்ஷிக்கு ஜயமேற்பட்டாலும் புதுமாதிரியான வியவஹா

ரங்கள் விளையக்கூடுமென்றும் நிலையான ஸாம ரஸ்யம் ஏற்படாது என்றும் நிலையான ஸாம ரஸ்யம் வேண்டுமானல் நீங்களே மனஸ்ஸை விசாலப்படுத்தி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒருமுடிவு செய்துகொள்வதுதான் உசிதம்என்றும்ஸாதிக்கும்படியாக இருந்தது. 17௳ வெள்ளிக்கிழமை ஸ்வாதி திருமஞ்ச னம் நடந்தது. அவ்வூரில் வியாபாரநிமித் தமாக வந்திருக்கும் ஸ்ரீ அம்மணம்பாக்கம் கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ததியாராதனத் திற்கு தன் சக்திக்கு அநுகுணமாக ஸமர்ப் பித்தார். அவர் கூடஇருந்து ஸேட்டுசளு டைய ஒத்தாசையின்பேரில் 4-11-56 ஞாயிற் றுக்கிழமை வரையில் ஆராதித்தார். 4-11-56 அவ்வூரைவிட்டுப் புறப்படும்போது இருகலை யாரும் மற்று மூரிலுள்ளோரும் ஒற்றுமையாய் விசேஷ வாத்யங்களுடன் பெரும் திரளாக வந்து ஸ்தோத்ரபாடங்களுடன் ஜே, ஜயகோ ஷங்களுடன் ஆங்காங்கு ஆலத்தியும் உபசா ரங்களும் ஸமர்ப்பித்து ஸோலாப்பூர் எல்லை வரையில் கொண்டுவிட்டு நியமனம் பெற்றுப் போனார்கள்.

இங்கிருந்து 21-மைல் தூரமுள்ள மோகல் என்ற ஊருக்கு எழுந்தருளியாயிற்று. வண் டிகளும் பரிஜனங்களும் வர தாமதமானபடி யால் விச்வரூபம் தாமதமாகநடந்தது. 5-11-56 ராத்திரி புறப்பட்டு 16- மைல் தூரமுள்ள துங்கத் என்கிற கிராமத்திற்கு எழுந்தருளி யாயிற்று. அன்று ராத்திரி நல்ல மழை பெய் தது. மழையினல் வண்டிகள் வர தாமதித்த தினல் அன்றும்விச்வரூபம் கொஞ்சம் நாழிகை கழித்து நடந்தது. 6-11-56 செவ்வாய்கிழமை மத்யாஹ்னம் புறப்பட்டு 8- மைல் தூரமுள்ள பாண்டுரங்கம் என்கிற பண்டரிபூருக்கு எழுந் தருளியாயிற்று.

மலையாளத் திருப்பதிகளுக்கு சோழபாண் டியநாடு முதலிய திருப்பதிகளிலுள்ளதுபோல் ஆழ்வாராசார்யர்கள் ஸந்நிதி, கோஷ்டி, ஆரா தனம் முதலியவைகரிகள் இல்லாதிருந்தா லும் அருளிச்செயலில் ஆழ்வார்களின் அதிக மான ஈடுபாடும்ப்ரதாநமாக வைத்துக்கொண்டு அத்திவ்யதேசங்களுக்குச் செல்வதுபோல் இந் தப் பாண்டுரங்கக்ஷேத்திரத்தை ஸ்ரீ தேசிகன் தன்னுடைய ஸங்கல்பஸூர்யோதயநாடகத் தில் முதலில் ஸூத்ரதாரனுடைய **आदिष्टोऽसि** என்கிற வாக்கியத்தில் **श्रीरंग, सत्यव्रत, यदुगिरि पुरुषोत्तम, पाण्डुरंगप्रभृतिषु भगवदभिव्यक्तिस्थलेषु'** என்றாரம்பித்து ஸ்ரீரங்காதிகளுடன் பகவத பிவ்யக்திஸ்தலமாகவும், பரமைகாந்திகளாயும், ஔபநிஷதரஹஸ்யோபதேசிகளாயும், மற்றும் விசேஷகுணங்கள் உடையவர்களாயுமுள்ளவர் களின் யாத்ராஸ்தலமாயும் அருளிச்செய்தி ருப்பது காரணமாகவும் பூனா போவதற்கும் அந்த வழியாகப் போக ஸௌகர்யமிருப்பதா லும் அங்கு எழுந்தருளத் திருவுள்ளம்பற்றி யாயிற்று. 'பீமாநதி' என்றும் 'சந்திரபாகா' என்றும் பெயர் பெற்ற புண்யநதியில் நீராடப் பெற்று க்ஷேத்திரத்திற்குப் பெருமையைக் கொடுத்துவரும் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திவ்ய மங்களவிக்ரஹத்தையும் அநுபவித்தாயிற்று. 7-11-56 புதன்கிழமை 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் 15-வது வர்ஷாராதனம் வேதப்ரபந்தபாராயணதிசாற்றுமுறை ஸம்பா வனை ஸ்ரீபாததீர்த்தம் கோஷ்டிகளுடன் அந்த க்ஷேத்ரத்தில் நடந்தது. மறுநாளும் அங்கேயே எழுந்தருளியிருந்தாயிற்று. அநேகமாக ஒரு நாள் தங்குவதாக உத்தேசிக்கப்பட்ட இடங்க ளில் மறுநாள் தங்குவதெல்லாம் போகிகளு டைய ஸௌகர்யத்திற்காக, அவர்களுடைய விசேஷ ப்ரார்த்தனையின்பேரில்தான் நேருகி றது. அந்த க்ஷேத்ரத்தில் வருகிற ஒவ்வொரு கார்த்திகை ஏகாதசியும் விசேஷமென்றும் அதற்காக ஐந்து லக்ஷம் ஜனங்கள் கூடுகிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். அதற்காக இப் பொழுது முதலே ஜனங்கள் வந்துகொண்டி ருக்கிறார்கள். ப்ரணயகலஹத்தில் ருக்மிணி கோபத்தினல் வந்து தபஸ் செய்துகொண்டி ருந்ததாயும் கண்ணன் தேடிக்கொண்டு அவ்வி டம் வந்ததாயும் அத்துடன் புண்டரீக மஹர் ஷிக்கு ஸேவை ஸாதித்ததாயும் பாத்மபுரா ணத்தில் இருப்பதாய்ச் சொல்லப்படுகிறது. புண்டரீகபுரம் என்பதுதான் பண்டரீபுரம் என்றும் பண்டிராப்பூர் என்றும் திருந்திருக் கலாம். 8-11-56 ராத்திரி அவ்விடமிருந்து

புறப்பட்டு 17-மைல் தூரமுள்ள ஷேட்பல்லுக்கு எழுந்தருளியாயிற்று. அங்கிருந்து புறப்பட்டு 9-11-56 ராத்திரி 17-மைல் டெம்பூரணிக்குளெழுந்தருளினர். வண்டிகள் வரதாமதித்ததாலும் ஏற்கனவே பார்க்கப்பட்டிருந்த இடம் ஸௌகர்யமில்லாமல் வேறு இடம் மாற்றவேண்டியிருந்தபடியாலும் அன்று விச்வரூபமாக வெகு நாழிகையாயிற்று. 10-11-56 டெம்பூர்ணியில் பெருமாள் எழுந்தருளியிருந்தார். அன்றையதினம் அந்தப்பக்கங்ளில் கோபூஜை கொண்டாடும் தினமென்றும் கோவைப்பற்றி ஸ்ரீ ஸந்நிதியில் ஏதாவது ஸாதிக்கவேண்டுமென்றும் ஊரில் உள்ள பிரமுகர்கள் பிரார்த்தித்துக்கொண்டதின்பேரில் பெருமாள் ஸந்நிதியில் ஸாயங்காலம் (4-மணிக்கு) அவ்வூர் ஜனங்கள் வந்துகூடியிருந்த கூட்டத்தில் கோ (பசு) வைப்பற்றி ஹிந்தி பாஷையில் 20 நிமிஷம் உபந்யஸித்தாயிற்று. ஹிந்தியைவிட மராட்டி பாஷை தான் அவ்விடத்தில் மிகவும் நடையாடுவதால் ஸ்ரீ அழகியசிங்கர் ஹிந்தியில் ஸாதித்ததை அவ்வூர் ப்ரமுகரான ஆயுர்வேதவைத்யர் மராட்டி பாஷையில் மொழி பெயர்த்துச் சொன்னர். எல்லோரும் கேட்டு ஆனந்தமடைந்தார்கள். பெருமாளையும் ஸ்ரீ அழகிய சிங்கரையும் ஸேவித்துவிட்டுப் போனர்கள். அன்று ராத்திரி புறப்பட்டு 13-மைல் தூரமுள்ள இந்தாப்பூரெழுந்தருளினர். 11-11-56 ராத்திரி புறப்பட்டு லோனி என்ற இடத்திற்கெழுந்தருளினர். ஸ்ரீ அழகியசிங்கர் அங்கு எழுந்தருளுவதை அவ்வூர் மராட்டி முதலிய பத்திரிகைக்குத் தெரியப்படுத்தியிருந்தார்கள். எழுந்தருளுமிடங்களில் ஜனங்கள் விசேஷ பக்தியுடன் திரள் திரளாக வந்து ஸேவித்துக்கொண்டுபோகிறார்கள்.

(தொடரும்)

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

[துர்முகி ஸ்ரீ தக்ஷிணாயனம் சரத் ருது - வ்ருச்சிக மீ 1956 நவம்பர் - டிஸம்பர் மீ]

16-11-56	கார்த்திகை மீ 1வ	வெள்ளிக்கிழமை	விஷ்ணுபதி; ஸங்க்ரமண தர்ப்பணம்; வ்ருச்சிக சுக்ல சதுர்தசி திதி.
17-11-56	2வ	சனிக்கிழமை	○பூர்ணிமை திதி; வைகாநஸ தீபம்.
18-11-56	3வ	ஞாயிற்றுக்கிழமை	க்ருத்திகை; திருமங்கையாழ்வார் - நம்பிள்ளை - 5-வது பட்டம் ஸ்ரீசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்; ஸ்ரீ பாஞ்சராத்ர தீபம்; திருக்கார்த்திகை.
19-11-56	4வ	திங்கட்கிழமை	ரோஹிணீ; திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம்; த்விதீயை திதி.
25-11-56	10வ	ஞாயிற்றுக்கிழமை	மகம்; 31-வது பட்டம் ஸ்ரீமந்நாராயணயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
28-11-56	13வ	புதன்கிழமை	ஏகாதசி.
29-11-56	14வ	வியாழக்கிழமை	த்வாதசி - த்ரயோதசி திதித்வயம்
30-11-56	15வ	வெள்ளிக்கிழமை	சதுர்தசி திதி.
1-12-56	16வ	சனிக்கிழமை	●அமாவாஸ்யை.
2-12-56	17வ	ஞாயிற்றுக்கிழமை	அதிதி; * ஸூர்யக்ரஹணம்.
3-12-56	18வ	திங்கட்கிழமை	ப்ரதமை திதி.

210734

5-12-56	20உ	புதன்கிழமை	பூராடம்; 43-வது பட்டம் ஸ்ரீ வீரராகவ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
6-12-56	21உ	வியாழக்கிழமை	உத்திராடம்; 34-வது பட்டம் ஸ்ரீ சடகோபராமாநுஜ யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
14-12-56	29உ	வெள்ளிக்கிழமை	கைசிகஏகாதசி; வ்ருச்சிக சுக்ல த்வாதசி திதி.

[தக்ஷிணாயனம் ஹேமந்த ருது - சாபமீ]

15-12-56	மார்கழிமீ 1உ	சனிக்கிழமை	சாபரவி 18-37; ஷடசீதி; ஸங்க்ரமண தர்ப்பணம்; வ்ருச்சிக - சாப சுக்ல த்ரயோதசிதிதி; திருப்பள்ளியெழுச்சி.
17-12-56	3உ	திங்கட்கிழமை	○பூர்ணிமை; மிருகசீர்ஷம்; 16-வது பட்டம் ஸ்ரீ சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
22-12-56	8உ	சனிக்கிழமை	பஞ்சமீ - ஷஷ்டி திதித்வயம்.
26-12-56	12உ	புதன்கிழமை	சித்திரை; 4-வது பட்டம் ஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
28-12-56	14உ	வெள்ளிக்கிழமை	ஏகாதசிவ்ரதம்; விசாகம்; 30-வது பட்டம் ஸ்ரீநிவாஸவேதாந்தயதீந்த்ரமஹாதேசிகன்; 40வது பட்டம் ஸ்ரீ ரங்கநாதசடகோபயதீந்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
30-12-56	16உ	ஞாயிற்றுக்கிழமை	கேட்டை, தொண்டரடிப்பொடியாழ்வார்; பெரிய நம்பிகள் திருநக்ஷத்ரம்.
31-12-56	17உ	திங்கட்கிழமை	● அமாவாஸ்யை.

குறிப்பு:- 1. வ்ருச்சிக சுக்ல த்ரயோதசிதிதி சிராத்தத்தையும், சாப சுக்ல த்ரயோதசி திதி சிராத்தத்தையும் மார்கழி மீ 1உ அநுஷ்டிக்கவேண்டும்.

2. ஷை தினத்தில் அபராஹ்நத்தில் வ்ருச்சிகமாஸ மிருப்பதால் அந்தமாதத்திய த்ரயோதசிதிதி அநுஷ்டிக்கவேண்டும். கார்த்திகை மீ 1உ த்ரயோதசிதிதியிருந்தும், முதல்நாள் (ஐப்பசி 30உ) அபராஹ்நவ்யாப்தி அதிகமிருப்பதால் வ்ருச்சிக மீ 1உ த்ரயோதசிதிதி இல்லை.

3. * கார்த்திகை மீ 17உ ஞாயிற்றுக்கிழமை ஸம்பவிக்கும் சூர்யக்ரஹணம் தமிழ்நாட்டில் தெரியாதாகையால் அங்கு புண்யகாலமில்லை. திருப்பதி முதலியவிடங்களிலும்; அதற்கு வடக்குபாகங்களிலும் க்ரஹணம் தெரியுமாதலால் அங்கு புண்யகாலமுண்டு. அன்றையதினம் அதிதியாதலால் ப்ரதமைதிதி சிராத்தத்தை மறுநாள்தான் செய்யவேண்டும்.

இவ்வருஷம் ஸ்ரீமதழகியசிங்கரின் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் (கார்த்திகை பூராடம்) பம்பாய்நகரில் நடக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur. Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

Regd. No. M. 4437.

2C 26/12

என்னப்பனெனக்கா யிகுளா யென்னைப் பெற்றவளாய்
பொன்னப்பன் மணியப்பன் முத்தப்ப னென்னப்பனுமாய்
மின்னப்பொன் மதிள்சூழ் திருவிண்ணகர்ச் சேர்ந்தவப்பன்
தன்னொப்பாரில்லப்பன் தந்தனன் தனதாள் நிழலே.

[திருவாய்மொழி 6-4-9.]

In case of non delivery please return to ;

"SRI NRISIMHA PRIYA"

Sri Ahobila Mutt, Tiruvallur.

To BOOK POST

Sri